உ
சிவமயம்

தம்பலகாமம்

# ஆதிகோணநாயகர் மஹா கும்பாபிஷேக மலர்

21.04.1999





University of Jaffna
235.1
TAM
166372(AR; Main)

வெளியீடு :

ஆதிகோணநாயகர்
தேவஸ்தானம்
அறங்காவலர் அவை
தம்பலகாமம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# திருத்தம்பலகாமம்
# ஆதிகோணநாயகர் கோயில்
# மஹா கும்பாபிஷேக விழாச் சிறப்பு மலர்

21.04.1999

235.1 TAM AR

UNIVERSITY OF JAFFNA ★ LIBRARY ★

மலர் ஆக்கம்
வே.வரதசுந்தரம்
("சந்நிதி"ஆசிரியர்)

University of Jaffna
166372
Library

166372

166372

வெளியீடு
ஆதிகோணநாயகர் கோயில் தேவஸ்தானம்
அறங்காவலர் அவை
தம்பலகாமம்

University of Jaffna
166372
Library

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதிவுத் தரவு


| | |
|---|---|
| நூலின் பெயர் | திருத்தம்பலகாமம் ஆதிகோணநாயகர்கோயில் மஹா கும்பாபிஷேக விழாச் சிறப்பு மலர் 21.04.1999 |
| பதிப்பு | 06.06.1999 |
| மலர் ஆக்கம் | வே. வரதசுந்தரம். |
| கணனி வடிவமைப்பு | சிவகாமி அம்மாள் பப்ளிகேஷன்ஸ் 39,36வது ஒழுங்கை, கொழும்பு - 06 |
| அச்சிடுபவர்: | யுனி ஆர்ட்ஸ் (பிறைவட்) லிமிடெட், கொழும்பு 13 |
| பதிப்புரிமை உடையது | |
| விலை | ரூபா 75/= |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தம்பலகாமத்தார் நேர் தாண்டவா



கழகப் புலவர்
பெ.பொ.சிவசேகரனார்

உம்பருக் கரியாய் போற்றி!
உமையவள் பாகா போற்றி!
நம்புவார் உள்ளே நின்று
நடம்புரி நாதா போற்றி!
அம்பலத் தரசே போற்றி!
அருட் பெருஞ் சுடரே போற்றி!
தம்பல காமத்துள் வாழ்
தனிப்பரம் பொருளே போற்றி!

ஏரணி குலங்கள் போற்றும்
ஈசனே போற்றி! போற்றி!
நீரணி வயல்கள் சூழ
நின்றவா போற்றி போற்றி!
தாரணி புகழும் எங்கள்
தம்பல காமத் தாரின்
சீரணி விளங்கச் செய்யும்
சிவபெரு மானே போற்றி!

ஔவுடன் சௌவு மானாய்!
ஐந்தெழுத் துருவு மானாய்!
செவ்விதழ்க் கமலம் பூத்துச்
செய்யெலாம் அழகு சொட்டத்
தைவருந் தென்றல் சூழுந்
தம்பல காமத் துள்வாழ்
தெய்வமும் ஆனாய் கோணைத்
தேவனே போற்றி போற்றி!

UNIVERSITY OF JAFFNA * LIBRARY *



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசீர்வாதம்

ஸ்ரீ ஞானசம்பந்ததேசிக பரமாச்சாரிய சுவாமிகள்

மதுரை ஆதீனம்

இலங்கையில் தம்பலகாமம் கிராமத்தில் எமது தமிழ்த் திருஞான சம்பந்த சுவாமிகளால் பாடப் பெற்ற ஆதிகோணநாயகர் திருக்கோயிலுக்கு குடமுழுக்கு விழா சிறப்பாக நடைபெற்றதாகவும், 06.06.1999 ஆம் நாளன்று மகா சங்காபிஷேகமும், விழா மலர் வெளியீட்டு விழாவும் நடைபெற இருப்பதாகவும் ஆலய முன்னாள் கணக்கர் திரு.க.நாகராசா எம்மிடம் நேரில் சமர்ப்பித்து எமது ஆசிச் செய்தியைக் கோரினார்.

சேய்நாடான இலங்கையில் இனக் கலவரத்தினால் அடிக்கடி பாதிக்கப்பட்ட தம்பலகாமம் அருள் மிகு கம்சகமனாம்பிகா உடனுறை ஆதிகோணநாயகர் தேவஸ்தானத்திற்கு திருப்பணிகள் முடித்து குடமுழுக்கு விழா நடத்தி இப்போது சங்காபிசேகமும், நூல் வெளியீடும் நடைபெற இருப்பதையும் இந்த நல்ல பணியில் கால் நூற்றாண்டுக் காலமாக தங்களை ஈடுபடுத்திக் கொண்டிருப்பதையும் அறிந்து பாராட்டுகிறோம்.மேலும், இத்தேவஸ்தானத்திற்கு நல்ல முறையில் திருப்பணிகளை செய்து புதுப் பொலிவு ஏற்படச் செய்த சிற்பியார் அருட்கலைத்திலகம் அராலியூர் திரு.எஸ்.எஸ்.மகேஸ்வரனைப் பாராட்டி ஆசிர்வாதிக்கிறோம்.

இலங்கைத் தமிழர்களுக்கிடையில் எத்தனையோ இடர்பாடுகளுக்கிடையில் சைவத்தையும், தமிழையும் வளர்த்து வரும் உங்களையும் உங்கள் குழுவினரையும் பாராட்டுவதுடன் நீங்கள் எல்லாரும் வாழ்வில் எல்லா வளங்களும் நலங்களும் பெற்று இன்புற்று வாழ வேண்டும் என்றும், அங்கு வாழும் எமதருமைத் தமிழ் மக்களின் இன்னல்கள் அத்தனையும் நீங்கப் பெற்று அவர்களது வாழ்வில் அமைதியும் நிம்மதியும் ஏற்பட வேண்டும் என்றும் எல்லாம் வல்ல சிவபெருமானைப் பிரார்த்தித்து ஆசிர்வதிக்கிறோம்.

எல்லாருக்கும் ஆசிர்வாதம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெய்வ கைங்கரியம்



பிரம்மஸ்ரீ
வேதாகமமாமணி
சோ.இரவிச்சந்திரக்குருக்கள்

கோயில் கும்பாபிஷேக வைபவங்கள் நாட்டிற்கும் நாட்டு மக்களுக்கும் அபிவிருத்தி, மகிழ்ச்சி, சாந்தி ஆகியவற்றை அளிக்கும் தெய்வ கைங்கரியமாகும்.

சிவத்தலமாகிய திருத்தம்பலகாமம் ஆதிகோணநாயகர் கோயிலில் மீண்டும் மஹா கும்பாபிஷேகம் நடைபெறுவது இந்த வகையில் சிறப்புடையது. பல துன்பங்களுக்கு மத்தியில் வாழும் அவ்வூர் மக்களுக்கு ஆதிகோணநாயகர் ஆறுதலையும் மனத்தைரியத்தையும் திருவருளையும் பொழிந்து வருகிறார்.

திருக்கோணமலை மாவட்டத்தில் பாலம்போட்டாறு பத்தினி அம்மன் ஆலய பொங்கல்விழா சிறப்பானது. எமது திருக்கோணமலை பத்திரகாளி அம்மன் ஆலயத்தில் இருந்து புறப்படும் பக்தர்கள் கால் நடையாகச் சென்று பொங்கல் விழாவில் பங்கு பெறுவார்கள். திருத்தம்பலகாமக் கோணநாயகர் கோவிலிலிருந்து பத்தினி அம்மன் மேள தாளத்தடன் ஊர்வலமாக எடுத்துவரப்பட்டு காட்டின் நடுவில் உள்ள பாலம்போட்டாற்று கோயிலுக்குக் கொண்டு வரப்படுவார்கள். பின்னர் பூசை வழிபாடு இடம்பெறும்.

இப்படிப் பல்வேறு வகையில் சிறப்புள்ள ஆலயம் நாட்டு மக்களுக்கு மேலும் பல நன்மைகள் தருவதற்கு அம்பாளை வேண்டி ஆசி கூறுகிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துரை



"சிவாகம கலாநிதி"
சிவஸ்ரீ. நா.சர்வேஸ்வரக் குருக்கள்
ஸ்ரீ கதிரமலைச் சிவன் தேவஸ்தானம்
சுன்னாகம்

மன்னர்களாலும், மகிமை நிறைந்த ரிஷிகணத்தவர்களாலும் பூஜிக்கப்பட்ட பூர்வீக தலங்கள் நிறைந்த பெருமை உடையது இவ்விலங்கை நாடாகும். இயற்கை வளம் நிறைந்த கிழக்குப் பகுதியில் "எடுத்தவன் தடுக்கை இனித்தனன் விரலால;" என்றும் திருமுறை வாக்குக்கமைய உருவத் திருமேனி தாங்கி உள்ள திருத்தலம், ஆதிகோணநாதராக உள்ள தம்பலகாம திருபதியாகும். சிவதர்மமும் பசு தர்மமும் ஒரு சேர ஆட்சி புரிந்த குளக்கோட்டு மன்னனால் பேணுதல் செய்து பூஜிக்கப்பட்டு, இறைபணி குறைவற்று நிகழ வேண்டி, பகதி சிரத்தை உடைய தொழும்பாளர்களை நியமித்து அவரவர் பணிமுறைகளை வகுத்து தர்ம சாசனம் செய்த சறப்பு இப்பதிக்கே உடையதாகும். இன்றும் இம்முறை வழிவழியாக பேணி தொழும்பு செய்து அருள் பெறுகிறார்கள்.

மகாராஜ கோபுரமாக உயரிய கோபுரத்துடன் நாற்புர மதிலுடன் திருத்தல சுந்தர விமானத்துடன் இவ்வாலயம் உள்ளது. ஆகமங்களிடையே சிறப்புடைய மகுடாகமத்தை தழுவிய கிரியா மார்க்கம் விழாகால சடங்குகள் இன்றும் பாரம்பரியமாக பேணி நடைபெறுகிறது. மூர்த்திகளுடன் மகா கும்பாபிஷேகம் நடைபெற்று மண்டல பூர்த்தி பெறுகிறார். இவ்வாலய பரிபாலன பணியை சபையினர் சிறப்பாக செய்து வருகிறார்கள். குறிப்பாக சிவப்பணியில் தன்னை முழுதாக ஈடுபடுத்தி சென்ற ஆண்டு 33 குண்ட சகித மகா கும்பாபிஷேகம் ஆகியவற்றை ஒன்று திரட்டி நடாத்திய பெருமைக்குரியவர் தலைவர் சிவசுப்பிரமணியம் ஜே.பி ஐயா அவர்கள் இறை பகதியும் பெருமையில்லா உயர் குணமும் நிறைந்த இவரது வழிகாட்டலும் இவ்வாலய சறப்புக்கு பெரும் பங்காகும். இவ்வரிய பணியை நிறைவேற்றி கும்பாபிஷேகம் நிகழ்த்தி மண்டல பூர்த்தியில் அனைவரும் இவ்வாலய வரலாற்றையும் பூர்வீகச் சிறப்பையும் தெரியும் வகையில் இந்நூல் வெளியிடுவது மிக அவசியமாகும். இப்பணிகளில் தம்மை ஈடுபடுத்திய தலைவர், சபையினர், தொண்டர்கள், உபயகாரர்கள், நூல் ஆசிரியர் ஆகியோருக்கு ஆதி கோணநாதர் பேரருள கிடைக்கத் துதி செய்து வாழ்த்துகிறோம்.

சுபம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெருக்கடி காலத்தில் திருவருள் சொரியும் ஆதி கோணநாயகர்

சி.தில்லைநடராஜா
பணிப்பாளர்
இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம்

## வாழ்த்துச் செய்தி

வரலாற்று சிறப்புமிக்க திருகோணமலை மாவட்ட திருத்தம்பலகாமம் ஆதி கோணநாயக கோவிலில் திருக்குடமுழுக்கு விழா இனிது நிறைவேறியது அறிந்து மகிழ்ச்சியடைகிறேன்.

திருத்தலங்கள் பல நிறைந்த திருகோணமலையில் ஆதிகோணநாயக கோயில் அனைவரும் அறிந்த ஓர் ஆலயமாகும்.நெருக்கடி நிறைந்த சந்தர்ப்பங்களில் எல்லாம் ஆதிகோணநாயகர் திருவருள் புரிந்து நெருக்கடிகளைக் குறைத்து பக்தர்களுக்கு நல்வாழ்வு அளித்து ஆனந்தத்தையும், அமைதியையும் வழங்கிக் கொண்டிருக்கின்றார்.

அருள்மிகு ஆதி கோணநாயக கோவில் திருக்குடமுழுக்கு விழாவைத் தொடர்ந்து இடம்பெறும் மண்டலாபிஷேகத்தை முன்னிட்டு மலரொன்று வெளிவர இருப்பதாகவும், இம்மலரை "சந்நிதி" சஞ்சிகை ஆசிரியர் திரு.மிகு.வே.வரதசுந்தரம் தொகுத்து எழுதி வருவதையும் அறிந்து மகிழ்ச்சியடைகின்றேன்.

அற்புதங்கள் புரியும் ஆதி கோணநாயகர் அருள் எப்பொழுதும் கிடைப்பதற்கும் நூல் சிறப்பாக வெளிவருவதற்கும் இறைவனைப் பிரார்த்தித்து நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைஞர்கள் பெருவாழ்வு பெறுக



அருட்கலைத்திலகம்
எஸ்.எஸ்.மகேஸ்வரன் ஆசாரியர்

திருத்தம்பலகாமத்தில் திருவருள் பாலித்து வரும் ஸ்ரீ ஹம்சகமனாம்பிகா தேவி சமேத ஆதி கோணநாயகப் பெருமானது கழல்களை இறைஞ்சி அவரது அருளால் கிராம மக்களும் கிராமமும் தழைத் தோங்க வேண்டும் என்ற நல்லெண்ணத்தின்படி திரு.சு.கா.சிவசுப்பிரமணியம் அவர்கள் தலைவரான தர்மகர்த்தா சபையினது முடிவுக்கிணங்க 1977ம் ஆண்டு இத்திருக்கோயிலை புனரமைப்பதற்கான பொறுப்பை இந்த சிறியோனிடம் ஒப்படைத்தனர். இதன்படி மலரும் எனது வேலைத்திறனில் ஐயம் கொண்டதை அறிந்தும் நான் தளராது கோண நாயகப் பெருமானது அருளினாலும் தர்மகர்த்தா சபை மற்றும் கிராம மக்களின் ஒத்துழைப்பினாலும், ஊக்கத்தினாலும் பலரும் போற்றும் வண்ணம் இவ்வாலய புனருத்தாரண வேலைகளை நிறைவேற்றி 1980 இல் மகாகும்பாபிஷேக விழாவினை நடாத்தி வைக்க முடிந்தது. அருள்மிகு கோணநாயகப் பெருமானது திருவருளே அன்றி வேறொன்றுமில்லை.

இவ்வாறாக நல்ல முறையில் வழிபாடுகள் ஆராதனைகள் நடைபெற்று வரும் இந்நாளிலே 1985ம் ஆண்டின் பின்னர் நாட்டு நிலமைகளினால் ஆலயம் பாழடைந்த நிலையில் இருக்க வேண்டியதாயிற்று. இதனால் சிவனடியார்களும் தர்மகர்த்தாசபையினரும் யாவரும் மனம் வருந்தி இறைவனிடம் திருக்கோயிலை புனரமைக்க ஆசி தந்தருளுமாறு வேண்டினர். இதன்படி இறைவனின் ஆசியைப் பெற்று 1999ம் ஆண்டு பாலஸ்தாபனம் செய்து திருப்பணி வேலைக்கான பொறுப்பினை மீண்டும் கோணேசப்பெருமான் என்னிடம் அளித்த இறையோனின் அருளை எண்ணிப் பரவசமடைகிறேன். இந்தப் பரவசமே என்னை இவ்வளவு விரைவாக இத்திருப்பணியை முடித்து 1999.04.21 இல் மகாகும்பாபிஷேகத்தினை நடாத்தி ஆலயத்தை புதுப் பொலிவுடன் கிராம மக்களுக்கு அருள் பாலிக்கும் வண்ணம் உருவாக்க என்னைத் தூண்டியது. இத்துடன் நான் இட்ட பணிகளை எல்லாம் இட்டபடி முடித்து உதவிய நமது ஊர்க் கலைஞர்களுக்கும் தென்னிந்திய கலைஞர்கட்கும் நன்றி சொல்ல வேண்டும். அவர்கள் ஆதி கோணநாயகப் பெருமானது அருளால் சுபீட்சமான வாழ்வு பெறவேண்டும் எனவும் வாழ்த்துகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவருட் சித்தம்



சுப்பிரமணியம் காளியப்பு சிவசுப்பிரமணியம்ஜே.பி
கௌரவ தலைவர்
ஆதிகோணநாயகர் கோயில்
தர்மகர்த்தா சபை
தம்பலகாமம்

ஆதி காலந்தொட்டு இலங்கையின் தெட்சண கைலாயம் எனப்போற்றப்படும் திருக்கோணமலையின் பழம்பெரும் கிராமமான திருத்தம்பலகாமத்தில் கோயில் கொண்டு அருள்பாலித்துவரும் ஸ்ரீகம்சகமனாம்பிகா தேவி சமேத அருள்மிகு ஸ்ரீ ஆதிகோணநாயக சுவாமி கோயிலின் 1973ம் ஆண்டு நடைபெற்ற தேர்தல் மூலமாகத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட நானும் சபையின் ஏனைய உறுப்பினர்களும் கடந்த இருபத்தைந்து ஆண்டுகால நிகழ்வுகளை நினைவு கூர்வது எமது கடமையாகும்.

தென்னிந்திய சிற்பசாஸ்திர வல்லுனர் திரு.நரசிம்மன் அவர்களின் ஆலோசனையின்பேரில் திரு.வைத்தியநாதன் ஸ்தபதி குழுவினரால் அமைக்கப்பட்ட கோபுரம் வானுயர்ந்து கம்பீரமாகக் காட்சியளித்த போதிலும் மூலஸ்தானம் முதலாகக் கோபுரம் வரையிலான அனைத்து மண்டபங்களும் திருத்தவும்.புதிதாகக் கட்டவும் வேண்டிய நிலையில் குறைபாடுகளுடன் காணப்பட்டன.

எனவே "என்கடன் பணிசெய்து கிடப்பதே" என்ற நாவுக்கரசரின் கூற்றுக்கமைய இக்கோயிலின் திருப்பணியை 1977ம் ஆண்டு மாசி மாதம் இந்நாட்டில் பற்பல கோயில்களைத் திறம்பட நிர்மாணித்துள்ளவரும் அராலியூரைச் சார்ந்த முருகேசு மார்க்கண்டு ஆச்சாரியாரைக் குருவாகக் கொண்டவருமான அருட்கலைத் திலகம் அராலியூர் மகேஸ்வரன் ஆச்சாரியார் அவர்களைக்கொண்டு ஆரம்பித்தோம்.

ஆண்டவன் திருவருளாலும் மகேஸ்வர ஆச்சாரியாரின் திறமையினாலும் தென்னிந்திய சிற்பிகளின் கைவண்ணத்தினாலும் தர்மகர்த்தா சபையின் விடாமுயற்சியினாலும் திருப்பணியைத் தொடர்ந்தோம்.இதன் பயனாகத் திருவிளையாடற் புராணத்தில் கூறப்பட்டுள்ள சிவனின் திருவிளையாடல்களில் பலவற்றைச் சித்தரிக்கும் சிற்ப வேலைப்பாடுகளுடன் அமைந்த திரிதள விமானம், சிவனுக்கும் சக்தியின் வலிமையையும்,சிவத்தால் மட்டுமின்றிச் சத்தியாலும் முடியும் என்ற தத்துவத்தைச் சித்தரிக்கும் சிற்பங்கள் அமைந்த துவிதள விமானம்,அம்பாளுக்கும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏகதள விமானம் என்பவற்றுடன், பல மண்டபங்களைக் கொண்ட எழில்மிகு ஆலயமாக இதனைத் திருத்தி அமைத்து 1980ம்ஆண்டு ஜனவரி மாதம் 28ம்திகதி நன்னாளில் 33 ஓமகுண்ட பட்ஷ உத்தம மகா கும்பாபிஷேகத்தை பிரம்மஸ்ரீ.நா.சோமாஸ்கந்தக் குருக்கள் அவர்களினால் முழு இலங்கையுமே மெய்மறக்கும் வண்ணம் நடைபெற திருவருள் கைகூடியது.எமது நிர்வாக காலத்தில் நடைபெற்ற முதலாவது கும்பாபிஷேகம் இதுவாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

இதனைத் தொடர்ந்து வருடாந்த மகோற்சவம்,நித்திய பூஜை என்பன ஆலய பிரதம் குரு பிரம்மஸ்ரீ.ந.நாகேஸ்வரக் குருக்களினால் நடாத்தப்பட்டு வந்தன. அவ்வேளை 1985ம் ஆண்டின் பின்னர் நாட்டில் நடந்த நிகழ்வுகளால் ஆலயத்தில் பல பாகங்கள் பாதிப்புக்குள்ளாகி நித்திய பூஜை, வருடாந்த மகோற்சவம் என்பன நடைபெறாமல் பூட்டப்பட்ட நிலையில் இருக்க வேண்டியதாயிற்று. இக்கால கட்டத்தில் கிரமத்து மக்களும் இடம் பெயர்ந்து அயல் கிராமங்களில் தஞ்சம் புகுந்த காரணத்தினால் ஆலய நிர்வாக நடைமுறைகளில் தடையேற்பட்டது.

இதன் பின்னர் 1987ம் ஆண்டிலிருந்து 1990ம் ஆண்டுவரை ஒரு கால நித்தியபூஜை மட்டும் நடாத்தப்பட்டது. இவ்வேளையில் ஆலயத்தின் சிறப்பே குடிகளின் சிறப்பிற்கு வழி வகுக்கும் என்ற பலரது அபிப்பிராயங்களுக்கு அமையவும் எமது சபையின் ஒருமித்த எண்ணத்திற்கமையவும் இவ்வாலயத்தை மீளத் திருத்தி அமைப்பதில் எமது சபை ஆர்வம் கொண்டது, அதற்கான ஆதிகோணநாயகப் பெருமானின் ஆசியை எதிர்பார்த்திருந்த எமக்கு அவர் அருளைப் பாலித்து தொடங்க சந்தர்ப்பம் வழங்கினார் கோணேசப் பெருமானின் திருவுளப்படி 22ம் திகதி 5ம் மாதம் 96ம் ஆண்டு பிரம்மஸ்ரீ நா.சர்வேஸ்வரக்குருக்கள் அவர்களைகக் கொண்டு அருட்கலைத்திலகம் அராலியூர் மகேஸ்வரன் ஆச்சாரியார் அவர்களின் ஆரம்ப வேலைப்பாடுகளுடன் பாலஸ்தாபன வைபவம் நடைபெற்றது.

22.05.96இல் பாலஸ்தாபனம் நடைபெற்று 24.08.98இல் ஆரம்பிக்கப்பட்ட திருப்பணி வேலைகள் இரவு பகல் வேறுபாடின்றி ஆச்சாரியார் மகேஸ்வரன் குழுவினராலும் தென்னிந்திய சிற்பிகளினாலும் வசந்த மண்டப வெளிவாயில், வசந்த மண்டப முகப்பு, இரண்டாம் பிரகார வாயிலில் அமைந்துள்ள இடைக் கோபுரத்தின் உள்ளும் வெளியுமான பகுதிகளின் அழகிய சிற்பங்கள் அமைக்கப்பட்டு அனைத்து விமானங்களும் புதிதாக அமைக்கப்பட்ட சிற்பங்களும் இராஜகோபுரமும் தென்னிந்திய வர்ணவேலை விற்பன்னர்களால் வர்ணம் தீட்டப்பட்டு அழகு மிளிரச் செய்யப்பட்டன.

இப்புனருத்தான திருப்பணிகள் நிறைவு பெற்று 1999ம் ஆண்டு சித்திரை மாதம் இருபதாம் திகதி ஆதிகோணநாயகராலய மூலஸ்தான சிவலிங்கத்திற்கும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் எண்ணெய்க் காப்பு சாத்தும் வைபவம் இடம் பெற்று 21ம் திகதி நவகுண்டபட்ஷ புனருத்தாபன கும்பாபிஷேகம் பிரம்ம ஸ்ரீ.நா.சர்வேஸ்வரக்குருக்கள் தலைமையில் உதவிக் குருக்கள் மாருடன் இனிதே நடாத்தி வைக்கப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல ஆயிரக்கணக்கான மக்கள் நிறைந்த சன வெள்ளத்தில் நடைபெற்ற எண்ணெய்க் காப்பு வைபவத்தையும் மறுநாள் மங்கள் வாத்தியங்களிடையே நடைபெற்ற கும்பாபிஷேக வைபவத்தையும் நினைத்து புளகாங்கிதமடைகிறேன். மேலும் எமது செயற்பாட்டில் இருந்த ஓர் ஒற்றுமையையும் நான் குறிப்பிட விரும்புகிறேன் அது என்னவெனில் நாம் 1973ல் பொறுப்பேற்ற நிர்வாகம் இதுவரை காலம் மக்களின் விருப்பத்திற்கிணங்க தெரிவு செய்யப்பட்டதும்ஆலய திருப்பணி வேலையை ஆரம்பித்த அதே ஆச்சாரியாரே இன்று வழமையான திருப்பணிவேலையை முடித்து வைத்ததும் ஆரம்பத்திலே பாலஸ்தாபன கிரியை மூலம் அறிமுகமான குருக்கள் ஐயா குடும்பமே இன்று வரையிலான கிரியைகளை நடாத்திக் கொண்டிருப்பதனையும் நோக்கும் போது இந் நிகழ்வுக்கெல்லாம் இறைவன் எமக்கு அளித்த ஆசீர்வாதத்தை எண்ணி பெருமிதமடைகின்றேன்.

எடுத்த வேலையை குறித்த நாளில் முடிக்கும் பொருட்டு இரவு பகலாக ஓய்வின்றி உழைத்து உதவிய மகேஸ்வரன் ஆச்சாரியாரும் அவரது குழுவினரும் எனது பாராட்டுக்குரியவர்களே மற்றும் இக்கும்பாபிஷேக வைபவத்தில் முன்னும் பின்னும் ஒத்துழைப்பு நல்கிய அனைவருக்கும் எனது பாராட்டுக்கள். தொடர்ந்தும் எஞ்சியுள்ள திருப்பணி வேலைகள் நிறைவு பெற வேண்டுமென்பதே எனது ஆவல்.



இயந்திர பூசை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேண்டிய நேரம் வெயிலும் மழையும் தருவார் ஆதிகோணநாயகர்



முடி.கோ.செல்லராசா
கௌரவ காரியதரிசி ஆலயபரிபாலனசபை

தொன்மைச் சிறப்பு வாய்ந்ததான தமிழ் கிராமமான தம்பலகாமத்திலே எழுந்தருளியிருக்கும் ஆதி கோணேஸ்வரர் தேவஸ்தானம் புராதன வரலாற்றுச் சிறப்பு மிக்கதாகும்.

பொன்னாசையும் மண்ணாசையும் கொண்ட மதவெறி பிடித்த போர்த்துக்கேயர் 1624ம் ஆண்டு திருக்கோணமலையைக் கைப்பற்றியதைத் தொடர்ந்து இந்த ஆலயமும் தரைமட்ட் மாக்கப்பட்டது. அங்கு திருத்தொண்டினை மேற்கொண்டிருந்தோர் ஆலய திருவுருவ விக்கிரகங்களைக் கொண்டு சென்று ஏனைய பகுதிகளிலும், காட்டிலும் மறைத்து வைத்திருந்தனர். இவ்வாறான விக்கிரகங்கள் சில தம்பலகாமத்திற்கு மேற்கேயுள்ள சுவாமிமலை என்று அழைக்கப்படும் இடத்தில் மறைத்து வைக்கப்பட்டு வழிபடப் பெற்றன.

அச்சமயம் தம்பலகாமம் வாசிகள் கோணமலைக் கிழக்கு பொற்சுவாமிமலைக் காட்டிற்கு செல்வது வழக்கம். அவ்வாறு செல்லும் வேளை சுவாமி மலையில் விக்கிரகத்துடன் செப்பேடு ஒன்றும் கண்டெடுக்கப்பட்டு தம்பலகாமத்தில் ஆலயம் அமைக்கப்பட்டு அவை பிரதிஷ்டை செய்யப்பட்டன. கோணேசர் குடிகொண்டதன் நிமித்தம் அவ்விடம் கோயில் குடியிருப்பு என அழைக்கப்பட்டு வருகிறது. இவ்விக்கிரகம் வைக்கப்பட்ட கோயில் அரசனால் கட்டப்பட்டதாகக் கூறப்படுகிறது. செப்பேட்டின் வழிமுறைப்படியே கோயில் நடைமுறைகளும், செய்கை முறைகளும் நடைபெற்று வந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம்பலகாமம் கிராமம் திட்டி திட்டியாக ஒவ்வொரு திடலாக அமைந்துள்ளது. இதன் இயற்கை அமைப்பு இப்படிக் காணப்படுகிறது. குளக்கோட்டு மகாராஜாவின் வேண்டுகோளின் பேரில் கந்தளாய் குளத்தை கட்டிய பூதங்கள் மண் அள்ளிப்போட்ட கூடையைத் தட்டி விட்டதனால் தான் இப்படித் திட்டி திட்டியாக அமைந்துள்ளது என்பது கருத்து.

சிவத்தின் மகிமையை விளங்க வைக்கும் இத்தலத்தின் சிறப்பு மேலும் இக்கும்பாபிஷேகத்தின் மூலம் சுடர் விட்டுப் பிரகாசித்து, பக்தர்கள் சென்று வழிபட்டு துயர்களைத் துடைக்கும் ஆலயமாக மீண்டும் வெளிக்கொணர்வதற்கு எம்பெருமானின் திருவடியினை சிரந்தாழ்த்தி வணங்குகிறேன்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது ஆசை



ஆ.தங்கராசா
பொருளாளர்

1973 இல் தெரிவு மூலமாக தெரிவு செய்யப்பட்டு தனாதிகாரி பதவியில் அமர்த்தப்பட்டேன். கோயில் பணி என்ற காரணத்தினால் மறுப்பின்றி பதவியை ஏற்றுக் கொண்ட நான் இன்றுவரை கோணநாயகரின் சகல முன்னேற்றத்துக்கும் என்னால் முடிந்த உதவி ஒத்தாசையை தர்மகர்த்தா சபைக்கு வழங்கியுள்ளேன். நிதிமூலம் எந்த ஒரு நெருக்கடிக்கும் இடம் வைக்காத எனது நிதி கையாள்கையை நடாத்தி வைத்துள்ளேன்.

ஆலயத்திருப்பணி வேலைகளைச் செய்வதற்கு எமக்கு கிடைத்த மகேஸ்வரன் ஆச்சாரியார் ஓர் அரிய பொக்கிஷம். எந்த வேலையை எந்தச் சந்தர்ப்பத்தில் சொன்னாலும் முகம் சுளிக்காது நாம் இட்ட பணியை சிரமேற்கொண்டு செய்து முடிக்கும் வல்லமை படைத்தவர் என்பதை செய்கையில் காட்டியுள்ளார். இதனை மக்களாகிய நீங்கள் அனைவரும் கண்டு கொண்டுள்ளீர்கள்.

நாட்டிலே அனர்த்தங்கள் ஏற்பட்டு நிர்வாகம் தடைபடாமல் இருக்குமானால் எமது 25வருட கால சேவையில் ஆலயத்தின் உள்ளும் புறமும் திட்டமிட்டபடி திருப்பணியாவும் முடிவடைந்து ஸ்ரீஹம்சகமனாம்பிகாதேவி சமேத கோணநாயகப் பெருமான் அனுக்கிரகத்தால் அவருக்கு பஞ்சரதம் ஓடவிட்டிருப்போம். எனினும் தொடர்ந்தும் இப்பணிகள் நடைபெற்று எமது ஆசைகள் நிறைவேற வேண்டுமென பிரார்த்திக்கின்றேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கும்பாபிஷேகம்



யோகிராஜ் சுவாமி ஸச்சிதானந்தா

எங்கும் வியாபித்துள்ள கடவுளின் அருட்சக்தியைப்பெற ஆலயம் அமைக்கப்பட்டிருக்கிறது.

இறைவனுடைய தெய்வீகசக்தி எங்கும் நிறைந்திருக்கிறது. பூரணப்பொருளாய் அச்சக்தி எங்கும் நிறைந்திருப்பினும் இலகுவில் இதை எல்லோராலும் பெற்றுக்கொள்ள முடிவதில்லை.

அங்கிங்கெனாதபடி எங்கும் நிறைந்திருக்கும் தெய்வீகசக்தி ஆலயத்தில் சேகரிக்கப்பட்டு பக்தர்களுக்கு பயன்படுகிறது.

ஆலயம் சிற்பாசிரியரின் திட்டப்படி அமைக்கப்பட்டு கும்பாஷேகம் செய்யப்படுகிறது. கும்பாபிஷேகத்தின்போது யாகசாலையில் செய்யும் வேத மந்திரங்களின் மூலம் ஆலயத்திற்குரிய சக்தியைப் பெறுகிறோம். யாகங்கள் கும்பாபிஷேகங்கள் மூலம் மூர்த்தியில் தெய்வீகசக்தி நிரப்பி வைக்கப்படுகிறது.

யாகசாலையில் நீர் நிரம்பிய கலசங்கள் இருக்கும் கலசங்களில் அந்தணர்கள் வாக்கு சக்தியை நிரப்புகிறது. கலசத்திலிருக்கும் சலத்திற்கு ஜெபத்தினது ஒலி அலைகளை விரைவில் ஈர்க்கும் தன்மை உண்டு. வெள்ளி தங்கம் தாமிரம் என்பவற்றினாலான கலசங்களுக்குள் இருக்கும் தண்ணீருக்கு இச்சக்தியைப் பெறும் வாய்ப்பு மிகவும் அதிகம். இந்த உண்மையை அறிந்தே ஆசாரியர்கள் யாகசாலையில் தாமிர கலசங்களில் நீர் வைத்து ஜெபம் செய்கின்றனர் அத்துடன் கலசங்களை சுற்றிலும் தானியங்களை முளைக்கச்செய்து பசுமையை மேலும் கலசத்திற்கு ஊட்டி வேதமந்திரங்களை ஓதுகின்றனர். யாகசாலையில் தேங்கும் ஒலிசக்தியை தங்கம் அல்லது வெள்ளிக் கம்பிகள் மூலம் கல்லாயிருந்த மூர்த்திக்கு அனுப்புகின்றனர். கும்பாபிஷேகத்தின் போது உருவேற்றப்படுகின்ற தெய்வீக சக்தியினாலே சிற்பியினால் செய்யப்பட்ட வெறும் சொரூபம் வேதமந்திர சக்தியைப் பெற்று பூரணப்பொருளாகி அருள் கொடுக்கும் மூர்த்தியாக அமைகிறது. தங்கம் அல்லது வெள்ளியில் செய்த யந்திரத் தகடுகளிலும் இச்சக்தியைப் பாய்ச்சி மூர்த்திகளுக்கு அடியில் வைக்கின்றனர். அருள் நிறைந்த மூர்த்தியிடமிருந்து அடியார்கள் அருளைப்பெறுகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்கீர்த்தனத்தின் மகிமை



## சுவாமி தந்திரதேவா

இந்து ஆலயங்களில் ஒலிபெருக்கிகளில் பக்தர்களின் பக்திப் பாடல்களே ஒலிக்க வேண்டும். பஜனைகள் கேட்க வேண்டும். இதற்கே ஒலிபெருக்கிகள் பயன்பட வேண்டும். மாறாக ஒலி பெருக்கிகளில் ஒலிநாடாக்களின் இசை மட்டும் பெரும்பாலான ஆலயங்களில் ஒலிபரப்பாகின்றன. கடவுளுடைய புனித நாமங்களைச் சொல்வதற்கு நாங்கள் வெட்கப்பட வேண்டியது இல்லை. பஜனைகள் மற்றும் ஆலய மணியோசை, மந்திர ஓசை போன்றவை மனிதனைக் காப்பாற்றும் ஆயினும் சில மனிதர்கள் கடவுளின் புனித நாமப் பாடல்களைப் பாட விரும்புவதில்லை. ஆனால் இவர்கள் ஆபத்துக்கள் நேர்ந்த வேளையில் பாதுகாப்புத் தேடி உடனடியாக 'கடவுளே' என்று கத்திக் கொள்வார்கள்.

ஆதி சங்கரர் இஷ்ட தெய்வ தத்துவத்தை ஸ்தாபித்தவர். அதாவது சிவன், சக்தி, விஷ்ணு, கணபதி, சுப்பிரமணியர், சூரியன் போன்ற தெய்வங்களை விரும்பிய வழிபாடாகும். இந்த உருவங்கள் எல்லாமே ஒன்று தான். ஒரு மனிதன் வெவ்வேறு நேரங்களில் வேறு வேறு விதமான உடைகளை மாறி மாறி அணிகின்றான். ஆயினும் அம்மனிதன் ஒரே ஆளாகத்தான் இருப்பான். இந்து சமயத்திலும் ஒரேயொரு தெய்வந்தான் உண்டு. ஆனால் பல உருவிலும் தோற்றமளிப்பார். சில சமயத்தில் சொல்கிறார்கள் உருவ வழிபாடு கூடாது என்று. ஆயினும் இந்த சமய பக்தர்கள் நெற்றியிலே உருவ வழிபாடு செய்கிறார்கள். கல், சிமேந்து கொண்டு வடித்த உருவங்கள் மற்றும் நெற்றியில் வைக்கப்பட்ட உருவங்கள் எல்லாம் மனத்தை ஒரு முகப்படுத்துவதற்கு அனுகூலமானவை.

மனிதனுக்கு இறை விசுவாசம் அசையாத மாதிரி இருக்க வேண்டும். "பிள்ளையார் பிள்ளையார் பெருமை வாய்ந்த பிள்ளையார்" என்பன போன்ற பாடல்களைப் பாடுகின்றோம். பிள்ளையார் கொடுத்தால் பெருமை வாய்ந்த பிள்ளையார் என்று பாட மாட்டோம். மனம் தூய்மைப்படுத்துவதற்காக நாங்கள் இறைவனைத் துதி செய்ய வேண்டும். சனி, வியாழன், போன்ற கிரகங்கள் மாறலாம். எங்கள் விசுவாசம் அசையாமல் இருக்க வேண்டும். கொஞ்சம் கொஞ்சமாக எல்லாவிதமான ஆசீர்வாதங்களும் வந்து சேரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்து மதத்தைச் சேர்ந்தவர்கள் இசையுடன் இந்து மத வழிபாடுகளை மதிக்க வேண்டும். இது போன்ற இளைஞர்கள் சமய அறிவு வளர்க்கும் சந்தர்ப்பங்களை மதிக்க வேண்டும். உலகத்தில் பணம், சொத்து, பெரிய உத்தியோகம் முதலிய பதவி மட்டும் மன அமைதி கொடுக்க முடியாது. எல்லா ஜீவராசிகளும் வழிபாடு மேற்கொள்ள வேண்டும். மாணவர்கள் கிருஷ்ண லீலைகள் பற்றித் தெரியாமல் நால்வர்களின் சரித்திரங்கள் பற்றித் தெரியாமல் நெற்றியில் விபூதி பூசுவது பிரயோசனம் இல்லாமற் போகும். இவ்வகையில் பெரியவர்கள் வேதாந்த அல்லது சித்தாந்த அடிப்படைக் கோட்பாடுகள் தெரியாமல் அவர்கள் 'நான் ஒரு இந்து' என்று சொல்வதில் பிரயோசனமிருக்கும். சகல இந்து மாணவர்களையும் குறைந்த பட்சம் வாரந்தோறும் ஒருமுறை பஜனை சமய வகுப்புக்களுடன் கலந்து கொள்ள வேண்டும். தற்காலத்தில் ஏராளமான இந்து ஆலயங்களில் இவ்வாறான நடைமுறைகள் இடம் பெறவில்லை என்பது ஒரு பெரிய குறைபாடாகும். சில ஆலயங்களில் பிரதான விடயம் பொங்கல் பானை போல் தெரிகிறது. ஆலய அர்ச்சகர் பிரார்த்தனை மந்திரங்கள் ஓதுவார்கள். ஏனையவர்களிடமிருந்து எந்த விதமான பிரார்த்தனைகளையும் காண முடியவில்லை. பழங்காலத்தில் ஔவையார் 'விநாயகர் அகவல;' இயற்றினார்.

ஆனால் தற்காலத்தில் சில பக்தர்கள் அத்துடன் நிறைய மாணவர்கள் 'விநாயகர் அகப்பை'க்குத் தான் முக்கிய இடம் கொடுக்கிறார்கள். இச்சூழ்நிலை மாற்றப்பட வேண்டியுள்ளது. உண்மையான வழிபாட்டிற்காக ஆலயத்திற்கு நாம் செல்ல வேண்டும். அதற்குப் பின் பிரசாதம் பெற்றுக் கொண்டால் தீமை இல்லை. ஒரு நல்ல பூசாரி இசை மூலம் பக்தி ஊக்குவிப்பார்.

சங்கா பாஜை கந்தா பாஜை
பாஜை பாஜை கரத்தாளா
மதுரா மிருதங்க பாஜை
பரம ரசாலா

அதாவது சங்குடன் மணியுடன் தாளத்துடன் இனிமையான மிருதங்க ஓசையுடன் வணங்குகிறோம். இவ்வழிபாடு மிக ரசனையானது குடும்ப ஒற்றுமையை விரும்பும் அங்கத்தவர்கள் சேர்ந்து பிரார்த்தனை செய்தால் நல்லது. பெற்றோர்கள் உதாரண சீலர்களாக முன்நின்று குடும்ப பஜனை நடத்தல் சிறப்பானது.

சில பெற்றோர்கள் மாணவர்களைப் பஜனை நிகழ்சிசிகளில் கலந்து கொள்வதற்கு நேரமில்லை என்று குறிப்பிடுகிறார்கள். இவ்வாறான வேடத்தால் இந்து மதம் பாதிக்கப்பட்டுள்ளது. பஜனை செய்வதன் நோக்கம் மாமுனிவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்நியாசிகள் ஆக வேண்டும் என்பது நோக்கம் அல்ல. எல்லா இந்துக்களும் ஆசார முறையில் ஜீவிக்க வேண்டும் என்பது தான். வாழ்க்கை முறையுடன் மௌனதியானம், மாலையுடன் நாம் ஜெபம், கீர்த்தனம் போன்ற பழக்கங்கள் வேண்டும். பஜனை என்ற சொல் பஜ - வழிபாடு, ஜன - மக்கள் அதாவது கடவுளுக்கு கீர்த்தி கொடுத்தல் நகர சங்கீர்த்தனம் என்பது வீதி விதியாக பஜனை செய்வது.

பக்தியோக தத்துவம் ரீதியாக வைஷ்ணவ சம்பிரதாயங்களைப் பொறுத்தவரை ஒன்பது வழிபாட்டு அம்சங்கள் அடங்கியுள்ளன. சிரவண - விஷ்ணு அவதாரங்களின் புனிதக் கதைகள் கேட்க வேண்டும். கீர்த்தனை கடவுள் மீது புகழ் பாடுதல். அதாவது பஜனை செய்ய வேண்டும். ஸ்மரண - இறைவனின் நினைவு வந்தனை வணங்க வேண்டும். பாதசேவன விஷ்ணுவின் பாதத்துக்கு சேவை செய்ய வேண்டும். தாஸ்ய - புனித தொண்டு செய்ய வேண்டும். பஜனை - அவதார ரூபங்களுக்கு ஆராதனை செய்ய வேண்டும். சகிஜன - இறைவனுடைய நண்பன் போலிருக்க வேண்டும். ஆத்ம நிவேதன - முழு வாழ்க்கையையும் பகவானுக்குச் சமர்ப்பிக்க வேண்டும்.

சிரவண கீர்த்தன மிகத் தொடர்புள்ளது. நாங்கள் எல்லாரும் ஒருமுறை கடுமையான வெந்நீர் குடித்தால் நாக்கு அவிபட்டதை அனுபவிக்கின்றோம். பின்னர் சாப்பிடுகின்ற உணவு சுவையாக இருப்பது இல்லை. ஆயினும் பசிகாரணத்தால் சமாளித்துச் சாப்பிடுகின்றோம். இவ்வகையில் சில பக்தர்கள் பஜனை செய்கின்றார்கள். அதாவது எதைப் பற்றிப் பாடினார்கள் என்பதை ஒன்றும் புரிந்து கொள்வது இல்லை. சில நேரம் பாடும்போது பகவானின் நாமத்தின் அளவு புரிந்து கொள்வதில்லை. இது அவிந்த நாக்குடன் உண்ணுவது போன்றது. எனவே கீர்த்தனை செய்வதில் மேலான நன்மைகளை விரும்பினால் முதலில் சிரவணம் வேண்டும். உதாரணமாக ஒரு பக்தன் மண்ணையுண்ட கண்ணனாம் நஞ்சுப் பாம்பு மீதினிலே நடனமாடும் கண்ணணாம் முதலியவற்றை பாடுகின்றான். இது கண்ணனுடைய லீலைகளைப் பற்றிய ஒரு பாடல். மண்ணையுண்ட கண்ணணாம் என்பது என்ன சம்பவம் பற்றியது? பாலகிருஷ்ணன் பலராமனுடன் விளையாடும் போது யசோதை கண்ணனுடைய வாயுள்ளே உலகத்தைப் பார்த்தார் என்பது பற்றியது. நச்சுப்பாம்பு மீதிலே என்பது என்ன? கோபாலன் ஜமுனை நதியிலே காலிங்கன் என்றும் பாம்பு மீதிலே நடனம் ஆடினான் என்பதாகும். சைவத்தைப் பொறுத்தவரை திருஞான சம்பந்தர் 'கோளறு திருப்பதிகம்' எதற்காகப் பாடினார், திருநாவுக்கரசு நாயனார் "சலம்பூவொடு தூபம;" எதற்காகப் பாடினார். இக்கதைகள் தெரிந்திருந்தால் அந்தப் பஜனைகள் அத்தேவாரங்கள் ஒரு கூடிய சந்தோஷமான உயர்ந்த பலனைத் தரும். ஆகையினால் சிரவணமூலம் கீர்த்தனை செய்தல் ஒரு மேலான பயனுடையதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆதி கோணநாயகர் ஆலயம் தோன்றியது எப்போது?

எஸ்.டி.சிவநாயகம்
மூத்த பத்திரிகையாளர்

உலகிலே புராணப் பெருமை வாய்ந்த ஆலயங்களில் திருகோணமலையில் உள்ள கோணேஸ்வரமும் ஒன்று. இது திருஞானசம்பந்தப் பெருமான் பாடிய தேவாரப்புகழ்பெற்ற தலமாகும்.

இந்தக் கோணேஸ்வரத்திற்கு அடுத்தபடியாக கோணநாயக சுவாமி கோயில் என்று பெயர் கொண்ட இன்னொரு கோயில் தம்பலகாமத்திலதான் உள்ளது. கோணேஸ்வரர், கோணநாயகர், கோணப்பெருமான் என்ற பெயரைத் தாங்கிய பிறிதொரு சிவாலயம் குவலயத்தில் வேறு எங்கும் கிடையாது. பல்லாயிரம் கோயில் கொண்ட பாரதத்தில் கூட எந்தவொரு மூர்த்திக்கும் கோணை என்பது அடையாகச் சூட்டப்படவில்லை.

பெருமை வாய்ந்த தம்பலகாமம் கோணநாயக சுவாமி கோயிலுக்கு இப்போது கும்பாபிஷேகம் நிகழ்ந்து துவஜாரோகணத்தின் பின் திருவிழா நடந்து தீர்த்தோற்சவமும் கோலாகலமாக நிறைவேறும் இந்த வேளையில் ஒரு சிறப்புமலர் வெளிவருவது மகிழ்ச்சியையும் மனநிறைவையும் தருகிறது. இந்தத் தொடர் வைபவங்களை சீராகவும் சிறப்பாகவும் ஆகம முறைப்படியும் நடத்தி முடிக்கும் திருப்பணியை மேற்கொண்ட கோயில் அறங்காவலர்கள் போற்றுதலுக்கு உரியவர்களாகிறார்கள்.

திருகோணமலை மாவட்டத்தில் பரந்த நெற்களஞ்சியமாக விளங்குவன தம்பலகாமத்திலும் மற்றும் கந்தளாயிலும் இருக்கும் வயல்களாகும். இந்த இரு இடங்களிலுமுள்ள பூமி செழிப்பதற்கும் விளைவதற்கும் காலாய் இருப்பது கந்தளாய் குளம்தான்.

இந்தக் குளத்தைக் கட்டியவன் குளக்கோட்டு மன்னன் என்பது புராண வரலாறு. குளக்கோட்டு மன்னனே திருக்கோணமலைக் கோணேஸ்வரத்தில் ஒரு காலத்தில் அமைந்திருந்த கோயிலையும் சுனையையும் நிர்மானித்தவன் ஆவான். இந்தக் கோயிலைக் கொடூரமாக அழித்து அதன் இடிபாடுகளான சட்டங்களையும் விட்டங்களையும், விதானங்களையும், கற்றூண்களையும் கொண்டுதான் திருகோணமலையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ள பிரடரிக் கோட்டையைக் கட்டினார்கள் போர்த்துக்கேயர் என்பது செவிவழி வரலாறு.

கந்தளாய் குளத்தை கட்டியவன் குளக்கோட்டன் என்ற தமிழ் மாமனன்ன்தான் என்று நாம் பெருமையோடு சொல்லிக கொண்டிருக்கும் அதேவேளையில் சிங்கள சரித்திரம் வேறு விதமாகக் கூறுகிறது. கந்தளாய் குளத்தை கட்டியவன் இரண்டாவது மகாசேனன் என்னும் சிங்கள மன்னன் எனறு மகாவம்சம் கூறுவதில் உண்மை உண்டா? பிற்காலத்தில் அக்குளத்தைத் திருத்திப் புனருத்தாரணம் செய்த பலருள் மகாசேனனும் ஒருவனாக இருக்கலாம். ஆனால் ஆதியில் கட்டியவர் யார்? காலம் தெரிந்த சரித்திரத்தைவிடக் காலந் தெரியாத புராணம் பழைமையானது என்பதை நாம் மனதில் கொண்டால் மயக்கத்திற்கு இடமில்லை.

குளக்கோட்டு மன்னன் சகலதுறைகளிலும் விற்பன்னனாக இருந்திருக்க வேண்டும். கோணேஸ்வரத்துக்கு மானியமும் தொழும்பும் வகுக்க விரும்பிய குளக்கோட்டன் பல கிராமங்களை நிர்மானித்தான் நெல் தேவையைப் பூர்த்தி செய்ய ஏற்றதான வளம்மிக்க பூமியைக் கொண்ட தம்பலகாமத்தை தேர்ந்தெடுத்த அவன் நீர் வளத்துக்கு என்ன செய்வதென்று ஆலோசித்திருக்க வேண்டும். பக்கத்திலே பாரிய குளம் ஏதும் இல்லாத காரணத்தினால் சுமார் ஒன்றரை காதத்திற்கு அப்பால் உள்ள -அதாவது 15மைலுக்கு அப்பால் உள்ள இடத்தில் இருந்துதான் நீரைக் கொண்டு வரவேண்டும் எனக் கண்டான். அதற்கு ஏற்ற நீர்நிலை கந்தளாய் என்னுமிடத்தில் தான் இருந்தது. நிலஅமைப்புச் சாத்திரமும் நீர்வடிகால் சாத்திரமும் அறிந்த ஒரு பொறியியலாளனாக குளக்கோட்டன் திகழ்ந்திருக்க வேண்டும். கந்தளாய் உயர் நிலைப் பூமி என்பதையும் உணர்ந்திருக்க வேண்டும்.கந்தளாய்க் குளத்தைக் கட்டிய குளக்கோட்டன் அங்கும் வயற்காணிகளை ஆக்கினான்.

கந்தளாய்க் குளத்தலிருந்து நீர்ப்பாசனம் செய்வதற்கு மூன்று வாய்க்கால்கள் அமைக்கப்பட்டன. இரண்டு சிறிய வாய்க்கால்கள் ஒன்று பெரிய வாய்க்கால். மேட்டுவாய்க்கால் என்ற ஒரு சிறிய வாய்க்கால் கந்தளாய் பகுதியில் அடங்கிய களனிகளுக்கு நீர்பாய்ச்சியது. பள்ள வாய்க்கால் என்ற மற்றொரு சிறிய வாய்க்கால் கந்தளாயை அடுத்துள்ள போத்தன் காடு என்ற களனிகளுக்கு நீர்பாய்ச்சியது. பேர் ஆறு என்னும் பெரிய வாய்க்கால் கந்தளாயிலிருந்து புறப்பட்டு காடுமேடுகளை எல்லாம் கடந்து 15மைல் தூரம் பாய்ந்து ஓடி தம்பலகாமத்திலுள்ள களனிகளைப் பொன் கொழிக்கச் செய்கிறது.

அந்தக் காலத்தில் மனிதனால் நிர்மணிக்கப்படும் ஒருவாய்க்காலை செயற்கை வாய்க்காலைப் பதினைந்து மைல்கள் தூரம் இட்டுச் செல்வது என்பது ஒரு பொறியியல் சாதனையே ஆகும். அதைச் செய்தவன் குளக்கோட்டன். ஆனால் அதைப் பூத கணங்களைக் கொண்டு செய்வித்தான் என்பது ஐதீகம்.

குளக்கோட்டன் காலத்திலேயே தம்பலகாமம் மனிதர் - பெரும்பாலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேளாண்மை விவசாயிகள் - திரளாகக் குடியேறி வாழும் சுயபூர்த்திக் கிராமமாக ஆகிவிட்டது என்று கொள்ள வேண்டும்.

தமிழ் மக்கள் எங்கு வாழ்கிறார்களோ அங்கெல்லாம் கோயில் அமைத்து வாழ்வது அவர்கள் வழக்கம். அவர்களுடைய தமிழ் பண்பாடு அதுதான். எனவே தம்பலகாமத்தில் அவர்கள் தோற்றுவித்த முதற் கோயில். அதாவது ஆதிகோயில் கோணநாயக சுவாமி கோயிலாகத்தான் இருக்க வேண்டும்.

அதனாலேயே தம்பலகாமத்தில் அமைந்துள்ள கோயில் ஆதி கோணநாயக சுவாமி கோயில் என்று அடை மொழியுடன் கூடிய கோயிலாக விளங்குகிறது.

போர்த்துக்கேயருக்குப் பயந்து விக்கிரகங்களைக் கொண்டு சென்று கிணற்றிலும் குழியிலும் குளத்திலும் போட்டு பின்னர் தான் கோயில் அமைக்கப்பட்டது என்று கூறும் வாக்கு மூலம் ஆராயப்பட வேண்டியது. ஆராய்வின்றி அப்படியே ஏற்றுக் கொள்வது ஏனோ மனதுக்குச் சற்று சங்கடத்தைத் தருகிறது.

ஆதலால் போர்த்துக்கேயர் காலத்துக்கு முற்பட்டதாகவும் குளக்கோட்டன் காலத்தைச் சேர்ந்ததாகவும் தான் ஆதி கோணநாயக சுவாமி



விக்கிரகங்கள் கண் திறத்தல் கைங்கரியம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோபுர தரிசனம் கோடி புண்ணியம்



க.நாகராசா
முன்னை நாள் கணக்காளர்
ஆதிகோணநாயகர் தேவஸ்தானம்.

"கோயில் இல்லா ஊரிலே குடியிருக்க வேண்டாம்". "கோபுர தரிசனம் கோடி புண்ணியம்;". இவைகள் முதியோர் சொல்லி வைத்த வாக்கியங்களாகும்.

இவ்வாக்கியத்திற்கமைய எமது தம்பலகாமம் கிராம மக்களுக்கு கோயில் கொண்டருளினார் ஸ்ரீ ஆதி கோணநாயகர். அது மட்டுமன்றி கோடி புண்ணியம் பெறும் பொருட்டு வானுயர்ந்த கோபுரத்தையும் அன்று அமைத்தனர். 1973இல் கௌரவ திரு சு.கா.சிவசுப்பிரமணியம் அவர்களின் தலைமையின் கீழ் அமைந்த தர்மகர்த்தாசபை படிப்படியாக திருத்த வேலைத் திருப்பணிகளைச் செய்ய முற்பட்டது. அவருக்கு பக்க பலமாக கௌரவ செயலாளராக இருந்து ஒத்துழைத்த பெருமை கௌரவ திரு.மு.கோ.செல்வராசா அவர்களையே சாரும். அதுமட்டுமன்றி அன்று தொட்டு இன்று வரை நிதிப் பொறுப்பாளராக இருந்து கடமையாற்றி வரும் கௌரவ தனாதிகாரி திரு.ஆ.தங்கராசா அவர்களை எப்படிப் பாராட்டுவதென்று தெரியவில்லை. ஏனெனில் அவரது கடமையுணர்வு, பக்தி, நாணயம் என்பன எமது சாதாரண பாராட்டுகளுக்கு அப்பாற்பட்டது. தூய உடை, தூய சிந்தனை, தூய தோற்றம் இவை எவரையும் கவரக் கூடியது. இதற்கு இலக்கணமாகத் திகழ்பவர் திரு.ஆ.தங்கராசா அவர்களே. 1977இல் ஆரம்பித்த திருப்பணி வேலை தலைவர் அவர்களின் பலத்த சிந்தனைக்கு தர்மகர்த்தா சபையின் ஏனையோர் அளித்த பங்களிப்பினால் ஆலயம் இன்று பிரமாண்டமாகக் காட்சி அளிக்கின்றது.

மகேஸ்வரன் ஆச்சாரியாரின் ஆலோசனை உடன் ஆக்க வேலைகளை இரவென்றும் பகலென்றும் பாராது உடல் நலம் குன்றியிருந்தும் மன வலிமையினால் ஏற்பட்ட திட்டத்தினால் மற்றையதை மறந்து கடமையே கண்ணாக சகல கருமங்களையும் தனது தலையிலே சுமந்து மற்றவர்கள், தர்மகர்த்தா சபையினரைக் குறை கூற இடமளிக்கக்கூடாது என்ற நிலையில் தலைவர் அவர்கள் பாடுபட்டமை பாராட்டுதற்குரியது. இந்தச் சபையினர் தொடர்ந்தும் தங்கள் சேவையை ஸ்ரீ ஹம்சகமனாம்பிகா சமேத கோணநாயகருக்கு செய்து சகல சௌபாக்கியங்களும் பெற வேண்டுமென்பது எனது ஆசையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசியுரை



பேராசிரியர் அ.சண்முகதாஸ்
கலைப்பீடாதிபதி
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்

ஆதிகோணநாயகருடைய ஆலயம் புனரமைக்கப்பட்டு குடமுழுக்கு நடந்ததெல்லாம் இறைவனின் திருவருளேயாகும். தம்பலகாமம் ஆதி கோணநாயகரைத் தரிசித்து எத்தனையோ ஆண்டுகள் கழிந்து விட்டன. அவரைத் தரிசிக்கும் வாய்ப்புக் கிடைக்குமோ என்று சில வேளைகளிலே எண்ணியதுண்டு. அவ்வெண்ணம் நிறைவேறும் கால அறிகுறியாக ஆதி கோணநாயகருக்கான சிறப்பிதழுக்கு எழுதும் இச்சிறிய உரைச் செய்தி அமைகின்றது.மகிழ்ச்சியான தாண்டவ நிலையிலே அருட் சிறப்புடன் அம்பாளுடைய கருணை நோக்குடன் வீற்றிருக்கும் ஆதி கோணநாயகப் பெருமானுடைய பேரருள் எங்களை உய்விக்கும்.

உம்பருக் கரியாய் போற்றி
உமையவள் பாகா போற்றி
நம்புவார் உள்ளே நின்று
நடம்புரி நாதா போற்றி
அம்பலத்தரசே போற்றி
அருட்பெருஞ் சுடரே போற்றி
தம்பல காமத்துள் வாழ்
தனிப்பரம் பொருளே போற்றி

என்று புலவர் பெ.பொ.சிவசேகரனார் அந்த ஆதிகோணநாயகரின் சிறப்புக்களை எடுத்துரைக்கிறார்.வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த தம்பலகாமம் ஆதிகோணநாயகரின் திருத்தலம் புதுப் பொலிவு பெற்றுத் திகழும் இவ்வேளையில் வெளியிடப்படும் சிறப்பிதழுக்கு இதனை எழுதுவதற்குக் கிடைத்த வாய்ப்பு இறையருளேயாகும். "அவனருளாலே அவன்தாள் வணங்கி" என்பது மணிவாசகர் வாக்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# ஆசியுரை



பொ.கந்தையா
காந்தி ஆசிரியர்

நிலைபெறுமா றெண்ணுதியேல் நெஞ்சே நீவா
நித்தலும் எம்பிரானுடைய கோயில் புக்குப்
புலர்வதன் முன் அலகிட்டு மெழுக்குமிட்டுப்
பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடித்
தலையாரக் கும்பிட்டுக் கூத்து மாடிச்
சங்கரா சயபோற்றி போற்றி யென்றும்
அலைபுனல்சேர் செஞ்சடையெம் ஆதியென்றும்
ஆரூரா என்றென்றே அலறா நில்லே
- திருநாவுக்கரசர் தேவாரம் -

மனிதப்பிறவியின் நோக்கம் கடவுளை அறிந்து கடவுளை வழிபட்டுக்கடவுளை அடைதலேயாகும் என்று ஆறுமுகநாவலர் பெருமான் அருளியுள்ளார். கடவுளை அறியவும் கடவுளை வழிபடவும் ஆலயங்கள் மிகவும் முக்கியமானவை. கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்றும் ஆலயந் தொழுவது சாலவும் நன்று என்றும் கோபுரதரிசனம் கோடி புண்ணியம் என்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆன்றோர்கள் கூறியுள்ளனர்.திருக்கோயில் இல்லாத திருவிலூர் அடவி காடே எனத் தேவாரம் அறிவுறுத்துகிறது.

கோயிலும் சுனையும் கடலுடன் சூழ்ந்த கோணமாமலையிலிருந்து பதினைந்து மைல் தூரத்தில் உள்ள தம்பலகாமம் ஆதிகோணநாயகருக்குக் கும்பாபிஷேகம் என்றதும் மக்கள் பெருமகிழ்வெய்தினர். பேரானந்தம் அடைந்தனர்.

ஒரு கிராமத்தின் வளர்ச்சிக்கு அவ்வூர்க் கோயிலும் பாடசாலையுமே மூல காரணங்களாகும். கோணநாயகர் ஆலயத்துக்குப் பக்கத்தில் உள்ள கோணநாயகர் மகாவித்தியாலயமும் சாரதா மகளிர் வித்தியாலயமும் சமயத்தையும் தமிழையும் வளர்க்க நாடு முன்னேற்றமடையும். ஆலயத்தின் இராஜகோபுரம் வானளாவி உயர்ந்த எண்ணங்களை மக்கள் மனதில் உதிக்கச் செய்கிறது.

ஆலய வழிபாட்டினால் சைவப் பெரு மக்கள் வாழ்வில் உயர்ந்து தர்ம சிந்தனையிலும் அன்புச் சேவையிலும் ஈடுபட்டுய்ய எம் பெருமான் அருளை வேண்டுகிறோம். நாட்டில் அமைதியும் சமாதானமும் சாந்தியும் ஏற்பட்டு மக்கள் நல்லவண்ணம் வாழவும் பிரார்த்திக்கிறோம்.

இன்பமே சூழ்க எல்லாரும் வாழ்க

ஆனந்தம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோணேசர் கல்வெட்டும் ஆதிகோணநாயகப் பெருமானும்

**இரா.சம்பந்தன்**
**திருக்கோணமலை பாராளுமன்ற உறுப்பினர்**



குரைகடல் ஓதம் நித்திலங் கொழிக்கும் கோணமாமலை அமர்ந்தாரே கோணேசர் கல்வெட்டும் ஆதி கோணநாயகப் பெருமானின் மகா கும்பாபிஷேகமும்.

தெட்சண கைலாயமென்றும், திரிகைலையெனவும் போற்றப்படுகின்ற சிவஷேத்திரமும், ஏழாம் நூற்றாண்டில் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரால் திருப்பதிகம் பாடப்பெற்றதுமான திருக்கோணநாதேஸ்வரர் எழுந்தருளியிருக்கும் திருக்கோணமலையின் திருத்தம்பலகாமத்தில் அருள்மிகு ஆதி கோணநாயக சுவாமிக்கும் ஸ்ரீ ஹம்சனாம்பிகை அம்பாளுக்கு மூன்றாவது புனருத்தாரண மகா கும்பாபிஷேக வைபவம் 21.4.1999 இல் இனிது நிறைவேறியமையிட்டு பெரும் மகிழ்வெய்துகிறேன்.

இறைவன்மீதுள்ள பக்தியினால் குளக்கோட்டு மன்னன் திருகோணமலையில் கோணேசப்பெருமானுக்கு சிவ ஆலயத்தையையும் கோபுரத்தையும் மக்களுடைய பாவங்களை அழிக்க வல்ல பாவநாசசுனையையும் அமைத்து திருப்பணியை நிறைவேற்றினான். ஆலயப்பணி தடையின்றி நடைபெற இறைபணி இனிது தொடர 2700 அவணம் நெல் விதைப்பு வயல்களை உண்டாக்கிய மாமன்னன் குளக்கோட்டன் அவ்வயல்களுக்கு நீர்பாய்ச்ச கந்தளாய் (கண்தழை) அல்லைக்குளம் ஆகியவற்றை கட்டுவித்து இறைவனாகிய கோணேசப்பெருமானுக்கு பெரும்பணி செய்தான். கோணேசப் பெருமானுக்கு தொழும்பு செய்வதற்கு மன்னனானவன் மருங்கூரிலிருந்து காரைக்காலிருந்து அழைத்து வரப்பட்ட குடி மக்களுக்கு பள்ளவெளி எனப்படும் நெல்வயல்களை மானியமாகக் கொடுத்தான் கோணேசர் கல்வெட்டில் கூறப்பட்டதை அடியொற்றி இன்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம்பலகாமத்தில் வம்சவழியாக சில குடும்பத்தினர் எம்பெருமானுக்கு தொழும்பு செய்து வருகின்றனர்.

1624ம் ஆண்டு சித்திரைத் திங்கள்முதலாம் நாள் புதுவருடப் பிறப்பன்று எம்பெருமானக்கு திருவிழா நடைபெற்றுக்கொண்டிருக்கும் போது போர்த்துக்கீச படைவீரர்கள் திருக்கோணேசர் ஆலயத்தைத் தகர்த்து, கொள்ளை அடித்தனர் அப்போது கோயிலில் இருந்த அடியார்களும் தொளும்பாளர்களும் ஆலயத்திலிருந்த புனித திருவுருவச்சிலைகளை எடுத்துச் சென்று மண்ணிலும் கிணற்றிலும் மறைத்து வைத்தார்கள். சில விக்கிரங்களை தம்பலகாமத்திற்கு எடுத்துச் சென்று சுவாமிமலை என்று அழைக்கப்படும் இடத்தில் பாதுகாத்து வைத்து வழிபட்டு வந்தனர். பின்பு 1637ஆம் ஆண்டில் தம்பலகாமத்தில் ஆதிகோணநாயகப் பெருமானின் ஆலயத்திருப்பணி வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன. 1928ம் ஆண்டு பரிபாலிப்பாளர்கள் கோயிலைக்கட்டியும் பிரதான விமானத்தைத் திருத்தியும் கும்பாபிஷேகம் செய்தனர்.

235/05
TAM
AR

1949ம்ஆண்டு ஆதிகோணேசர் பரிபாலன சபைத்தலைவர் திரு.சு.சிவபாலன் செயலாளர் திரு. ஐ.சரவணமுத்து தனாதிகாரி குருகுல பூபாலசிங்கம் ஆகியோர் கடமையாற்றிய காலத்தில் தான் தம்பலகாமம் கோணேசர் ஆலயத்தின் ராஜகோபுரம் கட்டப்பட்டு 1953ஆம் ஆண்டு எம்பெருமானின் கும்பாபிஷேகம் இனிது நிறைவேறியது. ஆலயத்திற்கு உரித்தான புராதன கோயில் வயல்களை ஆலயத்திற்கு கொடுத்து போதிய வருமானம் கிடைக்கப்பெற்றதால் அந்த வருவாயில் தலை சிறந்த சிற்பாசிரியர்களால் கோயில் மீண்டும் புனரமைக்கப்பட்டு 28.01.1980 இல் மகா கும்பாபிஷேகம் மங்களகரமாக நிறைவேறியது. நாட்டில் நடைபெற்ற அனர்த்தங்களினால் 1985, 1990ஆம் ஆண்டுகளில் தம்பலகாமம் கோணேசர் ஆலயம் பலவழிகளிலும் தாக்கப்பட்டு பெரிதும் பாதிப்புக்குள்ளானது. மீண்டும் எம்பெருமானின் கோயிலை புனருத்தாபனம் செய்வதற்கு ஆதிகோணநாயக சுவாமி தேவஸ்தான தர்மகத்தா சபையினரின் அளப்பரிய சேவையினாலும் இவ்வாலயத்தில் கடமையாற்றுகின்ற தொளும்பாளர்களின் அயராத முயற்சியினாலும் ஆலய புனருத்தாரண வர்ண வேலைகள் நம் நாட்டு சிற்பாசிரியர்களுடன் தமிழ்நாட்டில் இருந்து வருகை தந்த சிற்பாசிரியர்களின் சிற்ப வேலைகளின் மதிநுட்பமான செயல்திறத்தினாலும் கோணேசர் ஆலயம் திறம்பட புனரமைக்கப்பட்டதை எண்ணி பூரிப்படைகிறேன்.

குடமுழுக்கு வைபவத்தை ஆகம விதிப்படி நடத்திய கிரியா கலாப மனி சிவ.ஸ்ரீ .சோமஸ்கந்தக் குருக்கள் ஐயா அவர்களுக்கும் ஏனைய சிவாச்சாரிய பெருமக்களுக்கும் எனது பாராட்டுக்களைத் தெரிவிக்கிறேன். தொளும்புகள் திட்டம் பண்ணப்பட்ட பிரகாரம் இறைவனுடைய பூசைகள், அபிஷேகங்கள், விழாக்கள் முதலியவற்றை ஆகமவிதிப்படி சிறப்பாகச் செய்தால், சகல அலங்கார விளக்குகளும் உரிய எண்ணெய் நெய் வகையிட்டு ஏற்றப்பட்டுக் கிராம தேவதை பூசைகளையும் விளங்கும்படியாகச் செயய்தால் சகல அலங்கார விளக்குகளும் உரிய எண்ணெய் நெய்வகையிட்ட

166372



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்றப்பட்டக் கிராம தேவதை பூசைகளையும் விளங்கும்படியாகச் செய்தால் சகல அங்கார விளக்குகளும் உரிய எண்ணெய் நெய் வகையிட்டு ஏற்றப்பட்டுக் கிராம தேவதை பூசைகளையும் விளங்கும்படியாகச் செய்தால் மக்கள் துன்பமின்றிப் பெருஞ் செல்வத்துடனும் சந்ததிகளுடனும் இன்பமாக வாழ்வார்கள் என்பது குளக்கோட்டு மன்னன் கூறிய விதியாகும். இதனை அனுசரித்து நடைபெற்ற மகாகும்பாபிஷேக விழா நம் மக்களை வாழ்விக்க நடந்து கொண்டிருக்கும் அவலங்களிலிருந்து விடுவிக்க வழிவகுக்கும் என நம்புகின்றேன்.

மேலும் அனர்த்தத்தால் இடம் பெயர்ந்த தம்பலகாமம் மக்கள் தம் இல்லம் திரும்பவும் வான் பொழியவும், பூமி விளையவும், நம்நாடு செழிக்கவும், சாந்தியும் சமாதானமும் எம்நாட்டில் தழைத்தோங்கவும், அருள்தரு ஸ்ரீ ஹம்சகமனாம்பிகாதேவி சமேத அருள்மிகு ஆதிகோணநாயகப் பெருமானின் அடி பணிந்து இறைஞ்சுகிறேன்

வணக்கம்

இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க .



இந்திய வர்ணம் தீட்டும் கலைஞர் இராவணன் சிலைக்கு வண்ணம் தீட்டுகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுபீட்சம் பெறுக

யு.மார்பா
பொது நம்பிக்கை பொறுப்பாளர்
இலங்கை

திருத்தம்பலகாமம் கோணநாயகர் கோயில் மகாகும்பாபிஷேக மலருக்கு வாழ்த்துச் செய்தி அனுப்புவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். தங்களுடைய பதவிக் காலத்திலே கோயில் கைங்காரியங்களை மிகவும் சிறப்பாகவும், அர்ப்பணத்துடன் ஆற்றி வருவதற்கு பரிபாலன சபையினரை முதற்கண் பாராட்டுகிறேன்.

வன்செயல் காலத்திலும் மிகவும் அர்ப்பணத்துடன் செயற்பட்டார்கள் என்பது எனக்கு மிகவும் திருப்தி அளித்தது. கோயில் பரிபாலன சபையினரின் வேண்டுகோளை எப்போதும் ஏற்றுக் கருமங்களை ஆற்றியுள்ளேன். நான் முன்னர் ஒரு தடவை விஜயம் செய்துள்ள இக்கோயிலின் நிர்வாகத்தை இதே அர்ப்பண உணர்வுடன் எதிர் காலத்திலும் பரிபாலன சபையினர் ஆற்ற வேண்டும் என்று பிரார்த்திப்போமாக.

கும்பாபிஷேகம் ஊர்மக்களுக்கு சுபீட்சம் தரும் என்பது இந்துக்களின் அசையாத நம்பிக்கை ஆகும்.

பழமை வாய்ந்த இவ்வாலயத்தின் கும்பாபிஷேகம் தம்பலகாமம் மக்களுக்கும், திருகோணமலைக்கும், இலங்கைக்கும் சுபீட்சைத்தையும், அமைதியையும் தரும் என்பது எனது நம்பிக்கை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Let there be Peace and Prosperity



U.Mapa
Public Trustee of Sri Lanka

I have great pleasure in sending a message to the souvenir released to commemorate the Kumbabisheham of Thiruthampalagamam Athi Koneswara Temple.

At the outset I wish to congratulate the members of the Temple Paripalana Sabai for the excellent and dedicated manner in which they conduct the rituals of the temple during their present term of office.

It is with great satisfaction that I state that even during disturbances they had managed to run the temple with dedication.

I have always readily acceded to the requests of the temple management at all times.

Let us pray that the affairs of this sacred temple, which I have myself visited years ago, be continued in the same spirit and with the same dedication in the years to come.

It is the firm belief of the Hindus that Kumbabisheham brings prosperity to the devotees.

I am hopeful that the Kumbabisheham of this ancient temple with a glorious past will usher in an era of prosperity and peace to the people of Thampalagamam, Trincomalee and to the people of Sri Lanka.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருகோணமலை மாவட்ட இந்து இளைஞர்களின் வாழ்த்துச் செய்தி



"சிவஞானச்செல்வர்"
செல்லப்பா சிவபாதசுந்தரம்
மதிப்பார்ந்த பொதுச் செயலாளர்

திருகோணமலை மாவட்ட இந்துஇளைஞர்பேரவை

கோயிலும் சுனையும் கடலுடன் சூழ்ந்த தெய்வத் திருநகராம் திருகோணமலைத் தெட்சண கைலாயத்திலே ஆதியாய் உறையும் திருத்தம்பலகாமம் அருள் மிகு ஆதி கோணநாயகப் பெருமானுக்கு பலவித வன்செயல் நெருக்கடிகளுக்கும் தாக்கங்களுக்கும் பின்னர் ஆலய அறங்காவலர் சபையினருடைய இடைவிடாத அயராத முயற்சியினால் அண்மையில் திருக்குடமஞ்சன நீராட்டு விழா எனப்படும் மகா கும்பாபிஷேகம் சிறப்புற நடைபெற்றமையை இட்டு இந்து இளைஞர்களாகிய நாம் மன நிறைவடைகிறோம்.

கடந்த காலத்தில் நடைபெற்ற கும்பாபிஷேகத்தில் தொண்டாற்றிய எமக்கு இக்கும்பாபிஷேகத்திலும் தொண்டு புரிய வாய்ப்பளித்த எம்பெருமானின் திருவருட் பெருங்கருணைக்கு சிரம் தாழ்த்தி வணங்கி நிற்கிறோம்.

தம்பலகாமம் ஆதி கோணநாயகப் பெருமானுடைய மகா கும்பாபிஷேகத்திற்காக உழைத்த அன்பு உள்ளங்கள் அனைத்திற்கும் எமது மேலான பாராட்டினைத் தெரியத் தருகின்றோம். எம் பெருமானின் நித்திய நைமித்தியக் கிரியைகள் யாவும் முறையாகவும் ஒழுங்காகவும் இனிதே நடைபெற அறங்காவலர் சபையினர் ஆவன செய்வார்கள் என நன்றியுடன் எதிர்பார்க்கின்றோம். அறங்காவலர் சபையினால் வெளியிடப்படுகின்ற இம்மலருக்கு எமது வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

"தம்பலகாமத்திலுறை அண்ணலே போற்றி"
வணக்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துதிக்கப்படுவது நீறு



சிவநெறிச்செம்மல்
வை. அநவரதவிநாயகமூர்த்தி

சைவ ஒழுக்கங்களுள் அத்தியாவசியமாகக் கடைப்பிடிக்க வேண்டியது திருநீறு அணிவதேயாகும். கிடைத்தற்கரிய மானிடப் பிறவியைப் பெற்றும், மிக மேலாகிய சைவ சமய மரபிலே பிறந்தும் அநேக மக்கள் திருநீற்றின் பெருமையை உணராமல் இருக்கின்றனர். "பேணி அணிபவர்களுக்கெல்லாம் பெருமை கொடுப்பது நீறு", 'முத்தி தருவது நீறு' என்றெல்லாம் போற்றப்படும் திருநீறு சைவப் பெருமக்களால் துதிக்கப்படவேண்டியது.

திருநீறு என்பது விபூதி, பஸ்மம், இரக்ஷை, நீறு, சாரம், பஸிதம்,கவசம் அல்லது காப்பு என்பன இத்திருநீற்றின் மறு பெயர்கள். ஒவ்வொரு காரணத்தைக் கொண்டே இதற்கு ஒவ்வொரு பெயரும் வழங்கப்பட்டு வருகிறது. சகல பாவங்களையும் நீற்றலால் நீறு எனப் பெயர் பெற்றது. திருநீறு என்னும் மொழிக்கண்ணுள்ள 'திரு' என்பது 'திருக்கோவில;' 'திருக்குளம;' என்றாற் போல்வதோர் திருவருட் சக்தி பதிதலைக் குறிப்பால் உணர்த்தும் ஓர் மொழியாம். ஆகவே திருநீறு என்பது திருவருட்தன்மை வாய்ந்த நீறு என்று பொருள்படும். மேலான ஐசுவரியத்தைக் கொடுப்பதால் 'விபூதி' என்றும் உயிர்களின் மலத்தைப் போக்குவதால் 'ஸாரம்' என்றும் அறியாமையாகிய இருளை நீக்கி ஒளியைத் தருவதால் 'பஸிதம்' என்றும் பூதாதிகளைப் போக்கி காத்தலால் காப்பு அல்லது இரக்ஷை என்றும் சத்திநி பாதத்துக்குக் காரணமாய்ப் பழவினைகளை அழித்தலால் பஸ்மம் என்றும் இத்திருநீறு பலபெயர் பெறும்.

திருநீறு திருவருள் மயமாக விளங்குவது, தெய்வீகமானது, வினைகளை நீக்கும்பேறு பெற்றது.தேவர்களால் உடம்பில் அணியப்படுவது. மந்திரங்களின் வடிவமாக விளங்கும் திருநீறு மேனிக்கு அழகைக் கொடுப்பது எல்லாவற்றிற்கும் மேலான ஐசுவரியத்தைத் தருவது. எனவே பலராலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போற்றித் துதிக்கப்படும் பெருமை பெற்றது இந்தத் திருநீறு. இதனாலன்றோ திருஞானசம்பந்தரும்

"மந்திர மாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தர மாவது நீறு துதிக்கப்படுவது நீறு
தந்திரமாவது நீறு சமயத்திலுள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் திருவால வாயான் திருநீறே"

என்று திருநீற்றின் பெருமையை தமது திருப்பதிகத்திலே அழகாக எடுத்துக் கூறியுள்ளார்.

திருநீற்றிலே திருவருள் அதிகமாக விளங்குவதுடன் மிக உயர்ந்த உண்மைகளும் விளங்குகின்றன. பசுமலமானது நெருப்பில் இடப்பட்டுச் சுத்தமான திருநீறு ஆகின்றது. இதேபோல ஆன்மாக்களில் உள்ள மலங்கள் சிவபெருமானது ஞானத்தினால் சுடப்பட்டு ஆன்மாக்களுக்குச் சிவத்தன்மை உண்டாகிறது. இந்த உண்மையையே திருநீறு குறிக்கின்றது. இதனால் திருநீற்றைக் காணும் போது எங்களைப் பீடித்திருக்கும் மலத்தைப் பற்றிய எண்ணமும் அதை நீக்குவதற்கு நம்மைக் கடவுளிடம் ஒப்புவிப்பதே வழியென்ற உணர்ச்சியும் கடவுளை வழிபடுவதற்கு வேண்டிய அன்பும் மனக்கசிவும் உண்டாகத்தக்கன.

ஆகவே மானிடப் பிறப்பெடுத்த எங்களுக்குத் திருநீற்றிலும் மேலான செல்வமும் பேறும் இல்லை யென்பதைக் கூற வேண்டியதில்லை. சிவாலய தரிசனம் நித்தியம் செய்யவோ அல்லது சிவனடியாரைச் சேவிக்கவோ எல்லோராலும் எக்காலத்தும் செய்யக் கூடிய தொன்றல்ல. ஆனால் எவர்களுக்கும் எக்காலமும் இலகுவிற் கிடைக்கத்தக்கது திருநீறு. ஆதலின் கடவுளை அடைவதற்குப் பெருந்துணையாகவுள்ளது திருநீறே.

இத் திருநீற்றை மெய்யன்போடு அணிவதால் அது ஆன்மாவை மெல்ல மெல்ல ஆணவத்தினின்றும் நீக்கி தீவினையில் மனத்தை விடாமல் தடுத்து நல்வினையைச் செய்விக்கும். காலகதியில் சிவ புண்ணியங்களைச் செய்வித்து அதன் பயனாக ஞானத்தைப் பெறச் செய்து பழவினைகள் யாவற்றையும் போக்கிவிடும்.

இத்திருநீற்றை எல்லாரும் வணங்க வேண்டுமென்பதே திருஞானசம்பந்தரது விருப்பம். இதனாலே தான் ,'துதிக்கப்படுவது நீறு" என்று தமது தேவாரத்தில் கூறினார். இத்துடன் நின்று விடவில்லை தியானிக்கப்படவேண்டியிருப்பதாலும் ஸ்ரீபஞ்சாட்சரமாகிய மந்திரத்தின் உண்மையினை உடைமையினாலும் 'மந்திரமாவது நீறு' என்றும், இதைத் தியானித்து வணங்கின் முத்தி சித்திக்குமாதலால் 'முத்தி தருவது நீறு' என்றும் திருநீற்றின் பெருமையையே ஒரு பதிகத்தில் பாடி விட்டார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருஞானசம்பந்தர் மட்டுமல்ல, இன்னும் நாவுக்கரசர், திருமூலர், மாணிக்கவாசகர், பட்டினத்தார் முதலிய பல அடியார்களும் திருநீற்றின் மகிமையை உணர்ந்து அதைப் புகழ்ந்து பாடியிருக்கின்றனர். திருநீற்றை உத்தூளனமாகவும் திரிபுண்டரமாகவும் தரிக்கலாம். உத்தூளனமாவது பரவப்பூசுதல். திரிபுண்டரமாவது மூன்று குறியாகத் தரித்தல். திருநீறு பூசுகின்றவர்கள் இரண்டு வழிகளில் நன்மை செய்கின்றார்கள். தாங்கள் திருநீற்றைப் பூசும்போது 'சிவ',சிவ' என்று சொல்லி ஆதியும் அந்தமுமில்லாத பரம்பொருளை நினைக்கிறார்கள். அவர்கள் திருநீற்றைப் பூசிக் கொண்டு வெளியே செல்லும்போது அவர்களைப் பார்ப்பவர்களுக்கு சிவனது நினைவு உள்ளத்தில் உதயமாகிறது. தாங்கள் இறைவனை நினைப்பது மட்டுமல்லாமல் மற்றவர்களையும் சிந்திக்கச் செய்கின்ற செயல்தான் இவ்வுலகில் உயர்ந்த செயலாகக் கருதப்படும். சிவ,சிவ என்று உள்ளன்போடு திருநீற்றினை நெற்றியில் பூசும் அன்பர்களுடைய வினைகளையெல்லாம் வேரோடு களைந்து எறியும் திருநீற்றின் பெருமையை அளவிட்டுக் கூறமுடியாது.

ஆகவே, சைவப் பெருமக்கள் யாபேரும் மெய்யன்போடு திருநீற்றை அனவரதமும் அணிந்து அருட்கடலாம் ஆண்டவனது பாத கமலங்களை அன்புடன் சேவித்து வருவாராயின் ஈற்றில் அவர்களுக்கு முத்தி சித்திக்கும்.

" கங்காளன் பூசுங் கவசத் திருநீற்றை
மங்காமற் பூசி மகிழ்வீரே யாமாகில்
தங்கா வினைகளுஞ் சாரும் சிவகதி
சிங்கார மான திருவடி சேர்வரே "

- திருமந்திரம் -



கும்பாபிடேக விழாவில் திருக்கோணமலை அன்பு இல்லக் குழந்தைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மகா கும்பாபிஷேக பிரதம குரு முத்தமிழ்க் குருமணி சிவஸ்ரீ நா. சர்வேஸ்வரக் குருக்கள்.



கோயில் கோபுரத்தில் கும்பாபிஷேகக் கிரியைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பிரதம குரு நா. சர்வேஸ்வரக் குருக்கள் கோயில் பரிபாலன சபைத் தலைவர் திரு. கா. சிவசுப்பிரமணியம் அவர்களின் பாரியாருக்குக் காளாஞ்சி வழங்கி ஆசீர்வதிக்கிறார்.



பிரதம குரு நா. சர்வேஸ்வரக் குருக்கள் கோயில் பரிபாலன சபைச் செயலாளர் திரு. மு. கோ. செல்லராசா அவர்களின் பாரியாருக்குக் காளாஞ்சி வழங்கி ஆசீர்வதிக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கும்பாபிஷேக விழாவில் திருவுலா.



கும்பாபிஷேக விழாவில் மேளக் கச்சேரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கோயில் முக்கிய தொழும்பாளர் வைராவியாரை மலர் மாலை சூட்டிக் கௌரவிக்கிறார் செயலாளர் மு. கோ. செல்லராசா அவர்கள்.



பொருளாளர் ஆ. தங்கராசா அவர்களை திருக்கோணமலை பத்திரகாளி அம்மன் கோயில் பிரதம குரு வேதாகமமாமணி பிரம்மஸ்ரீ ரவிச்சந்திரக் குருக்கள் ஆசீர்வதிக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிச்செய்தி



செ.அழகரத்தினம்
வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி

ஈழத்து இந்துத் தலங்களுள் குறிப்பிட்டுக் கூறக் கூடிய வகையில் வரலாற்றுச் சிறப்பும் வனப்பும் ஒருங்கே வாய்க்கப் பெற்ற திருமலை மாவட்ட தம்பலகாமம் ஆதிகோணநாயகர் ஆலயமும் ஒன்றாகும். கால வெள்ளத்துள் காத்திராப் பிரகாரமாக ஏற்படும் அனர்த்தங்கள் - இடைஞ்சல்கள் காரணமாக இவ்வாலயமும் பல சந்தர்ப்பங்களில் திருத்தப் பணிகளுக்கும், புதுப்பித்தலுக்கும் உட்பட வேண்டிய நிலை உருவாகியுள்ளது. இருபதாம் நூற்றாண்டின் பின்னரைக் கூற்றில் இரு தடவைகளில் - 1980லும், 1999லும் புனரமைக்கப்பட்டு குடமுழுக்கு நிகழ்த்தப்படவேண்டிய நிலை இத்தலத்திற்கு ஏற்பட்டுள்ளது. இது இறைவனின் ஏற்பாடாக இருந்தது போலும்.

1980ல் இத்தலத்தின் திருக்குடமுழுக்கின் போது கும்பாபிஷேக மலர் ஒன்று வெளியிடப்பட்டது. தமிழினத்திற்கெதிரான வன்செயல் காரணமாக பழமையும் பெருமையும் பெற்ற இத்தலம் மீண்டும் பாதிப்புக்குள்ளாகி சில வருடங்கள் பூசனைகள் கூட நடைபெறா நிலையில் இருந்தமை மறக்கவியலாது. இது மனித நேயமுள்ள மக்கள் மனதில் பெரும் சுமையயாக நிறைந்து நின்றதுடன் மாறா வடுவையும் ஆழப் பதிந்து நிற்கின்றது.

எனினும் ஆதிகோணநாயகர் அருளால் ஆணைபிறந்து அனுமதி கிடைத்து ஆலயப் புணருத்தாரனப் பணிகள் ஆரவாரமற்ற வகையில் அழகுறவமைந்து இன்று பூரண நிறைவும் புதுப் பொலிவும் பெற்றதாகத் தம்பலகாமம் ஆதிகோணநாயகர் ஆலயம் மிளிர்கின்றது. இதற்குப் பெருமளவு காரணமாக இயங்கும் ஆலய பரிபாலன சபை நிர்வாகக் குழு அங்கத்தவர்களை - அவர்களது இறை பணிப் பாங்கினை - இறை பக்தியினை - சமய சமூகத் தொண்டினை அனைத்து தம்பலகாமத் தமிழ் மக்களும் ஒரே மனநிலையில் பாராட்டவும் நன்றி நவிலவும் கடப்பாடுடையவர்களாகின்றனர். இச்சபை 1973லிருந்து பொறுப்புடன் இயங்குகிறது. குறிப்பாகத் தலைவர் திருசு.கா.சிவசுப்பிரமணியம், செயலாளர் திரு.மு.கோ.செல்வராஜா, பொருளாளர் திரு.ஆ.தங்கராசா போன்ற


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழகுறவமைத்து இன்று பூரண நிறைவும் புதுப் பொழிவும் பெற்றதாகத் தம்பலகாமம் ஆதிகோணநாயகர் ஆலயம் மிளிர்கிறது. இதற்குப் பெருமளவு காரணமாக இயங்கும் ஆலய பரிபாலன சபை நிர்வாகக் குழு அங்கத்தவர்களை - அவர்களது இறை பணிப் பாங்கினை - இறை பக்தியினை - சமய சமூக தொண்டினை அனைத்து தம்பலகாமத் தமிழ் மக்களும் ஒரு மன நிலையில் பாராட்டவும் நன்றி நவிலவும் கடப்பாடுடையவர்களாகின்றனர். இச்சபை 1973லிருந்து பொறுப்புடன் இயங்குகிறது. குறிப்பாகத் தலைவர் திரு.கா.சுப்பிரமணியம், செயலாளர் திரு.மு.கோ.செல்வராசா, பொருளாளர் திரு.ஆ.தங்கராசா போன்ற பெரியோரது அயரா அர்ப்பணிப்பும் தளரா ஊக்கமும் உண்மை ஈடுபாடும் பாராட்டப் பட வேண்டியவையே.

பெரியோரது அயரா அர்ப்பணிப்பும் தளரா ஊக்கமும் உண்மை ஈடுபாடும் பாராட்டப்பட வேண்டியவையே.இவ்வருட குடமுழுக்கை முன்னிட்டு நாற்பது பக்கங்கள் கொண்ட சிறிய அளவிலான வெளியீடு ஒன்று திரு.வே.வரதசுந்தரம் அவர்களால் பதிப்பிக்கப்பட்டமை மற்றுமொரு சிறப்பு நிகழ்வாகும். இதைத் தொடர்ந்தாற் போல் 1999ல் இன்னுமொரு கும்பாபிஷேக மலர் வெளிவருவதும் வரவேற்கத்தக்கதாகும். இம் முயற்சி போற்றப்பட வேண்டியதுமாகும்.

இம்மலருக்கு தம்பலகாமம் கிராமத்தோடு சம்பந்தப்பட்ட எம்போன்றோருக்கும் வாழ்த்துச் செய்தி வழங்கும் வாய்ப்புக் கிட்டியது குறித்து அக மகிழ்வடைகின்றேன் மலராக்கக் குழுவினருக்கு மனமார்ந்த எனது நன்றிகள்

இவ்வாறான நிகழ்வுகள் இன்றைய காலத் தேவைகளாகின்றன. வரலாற்று நிகழ்வுகளை யதார்த்த வடிவில் ஆவணப்படுத்துவதற்கு அமைவாகின்றன. இவை உரிய கால நேரத்தில் அறிக்கைப் படுத்தாவிடில் அவை உண்மைத் தன்மை நலிந்து அர்த்தமற்றதாகி விடக் கூடும் ஆகவே இத்தகைய மலர்களின் மணமும் அழகும் இரசிக்கப்பட்டும் உருசிக்கப்பட்டும் அவை நெடுங்காலத்திற்குப் பாதுகாப்பாக பேணப்பட வேண்டியனவாகவும் இருக்கின்றன.இறைவனே எம்மை ஆள்பவன், அவனே எம்மை ஆட்டுவிப்பவன், அவனது நாட்டமே நமது நாளாந்த ஆட்டங்களாக அமைகின்றன. அவன் மீது இடையறாப் பக்தி வைத்தால் தடையிலாப் பற்றுக் கொண்டால் உண்மை அன்பைப் பெய்தால் எல்லோர்க்கும் இன்பமாய் அமையும். நன்மையாய் முடியும்.

இம்மலரில் பல அரும் பெரும் கருத்துக்கள் சமய - தத்துவங்கள் வரலாற்று உண்மைகள் - காத்திரமான உணர்வுகள் இடம் பெறுமென எதிர்பார்க்கலாம். அத்தோடு இம்மலர் நறுமணத்துடன், நல்லெழிலுடன் கமழவும், திகழவும் எமது ஆசிகளையும் வாழ்த்துக்களையும் இறைவனை முன்னிறுத்தி வழங்குவதில் இன்பமுறுகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவபூமி

## ஆசியுரை



சைவப் புலவர்
இ.வடிவேல்

ஆதியாகிய கோணைநாயகர் எழுந்தருளியிருக்கும் தம்பலகாமப் பதியில் பக்தி பரவசத்துடன் மிகு கோலாகலமாக மகா கும்பாபிஷேகம் 21.04.99 புதன்கிழமை இனிது நிறைவேறியமை எல்லாம் வல்ல கோணேசப் பெருமானுடைய திருவருட் செயலேயாகும்.

தம்பலகாமம் ஸ்ரீ கம்சகமனாம்பிகா சமேத கோணநாயகரின் புனராவர்த்தன பிரதிஷ்டா கும்பாபிஷேகத்தை சிவஸ்ரீ கா.சர்வேஸ்வரக் குருக்கள் அவர்களும் ஏனைய சிவாசாரியர்களும் லோக ஷேமத்திற்காகவும் சைவத் தமிழ் மக்களின் எதிர்கால நன்மைக்காகவும் சிவ கைங்கரியம் பண்ணி தம்பலகாமம் ஆலயத்தில் திருவருட் பிரகாசத்தை ஏற்றியுள்ளார்கள்.

சிவலிங்கப் பெருமானுடன் ஏனைய பரிவார மூர்த்திகளும் மந்திர, தந்திர, யந்திர, யாகாதி கர்மங்களினாலும், புனித தீர்த்தத்தினாலும் அருளொளி ஏற்றப்பட்டு பக்தப் பெருமக்களுடைய உள்ளங் குளிர்ந்து உயர் நலம் பெருகும் வண்ணம் ஆதியாகிய கோணநாயகர் ஆலயப் பரிபாலன சபைத் தலைவர் திரு.சு.கா.சிவசுப்பிரமணியம் அவர்களும், பரிபாலனசபை உறுப்பினர்களும், தொழும்பாளர்களும், தொண்டர்களும் திரிகரண சுத்தியோடு தியாகப் பணிபுரிந்து மகா கும்பாபிஷேகத்தை மங்களகரமாக நிறைவேற்றக் கோணேசப் பெருமான் அருள்பாலித்துள்ளார்.

ஈழநாட்டில் அருள்மிகு சிவஸ்தலங்கள் ஐந்து இருப்பதாக வரலாறுகள் கூறுகின்றன. கிழக்கே திருக்கோணேஸ்வரம், மேற்கே முனீஸ்வரம், வடக்கே நகுலேஸ்வரம், தென்கிழக்கே தான்தோன்றீஸ்வரம், (கொக்கட்டிச் சோலை) வடமேற்கே திருக்கேதீஸ்வரம் என்பன. இவற்றுள் “திரு” என்ற பெருமைக்குரியதும் தேவாரப் பாடல் பெற்றதுமாகிய தலங்கள் இரண்டு. அவற்றுள் ஒன்று திருக்கோணேஸ்வரம்.

சிவபக்தனான இராவணேஸ்வரன் தென்னிலங்கையை ஆண்ட நீண்ட நெடுங்காலம் தொடக்கம் இலங்கை சிவபூமியாகப் பேசப்பட்டுவருகிறது. இதனைத் திருமூல நாயனார் திருமந்திரத்தில் சிவபூமி என்றே பாடுகிறார்.

மேரு நடுநாடி மிக்கிடை பிங்கலை
கூருமிவ் வானின் இலங்கைக் குறியுறும்
சாருந் தினைவனத் தன்மா மலையத்தூடு
ஏறும் சுழுமுனை இவை சிவபூமியே”



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பது அப்பாடல்

சிவபூமி என்று பேசப்படும் இந்த இலங்கையிலுள்ள பஞ்சஸ்வரங்களில் ஒன்றான திருக்கோணேஸ்வரத்தில் குளக்கோட்டு மன்னன் திருப்பணிகள் செய்த வரலாறு கோணேசர் கல்வெட்டில் பேசப் படுகிறது.

சோழப் பேரரசு ஈழநாட்டினையும் தனது செல்வாக்கினால் ஆண்ட காலத்தில் வரராஷதேவனுடைய மகன் (சோழகங்கன் குளக்கோட்டன்) ஈழநாட்டுக்கு வந்து சிவாலயத் திருப்பணிகள் செய்தான்.

திருக்கோணேஸ்வரத்தையும் கந்தளாய்க் குளத்தையும் அமைத்துக் கிழக்கிலங்கையை வளப்படுத்தி அதனை சிவபூமி என மேன்மைப்படுத்திய காரணத்தினால் அவனுடைய இயற்பெயர் மறைந்து காரணப்பெயரான குளக்கோட்டன் என்பது நிலைத்து விட்டது.

குளக்கோட்டன் வகுத்த நிர்வாகத் திட்டமே "கோணேசர் கல்வெட்டு". அதன் பிரகாரம் பூபால வன்னிமை நிதிப்பொறுப்பாளர் கனகசுந்தரப் பெருமாள் தானத்தார், வரிப்பத்தார், அடப்பனார், புலவனார் என்பவர்களின் நிர்வாகம் தம்பலகாமப்பற்று கொட்டியாபுரப்பற்று கட்டுக்குளப்பற்று என்னும் பிரதேசங்களில் நடைபெற்று வந்தது.

போர்த்துக்கீசர் கோணேசர் கோவிலை அழித்தபோது அங்கிருந்த கோணேசப் பெருமானுடைய ஒரு திருவுருவத்தை எடுத்து வந்து தம்பலகாமம் கோணேசர் கோவிலில் வைத்து வழிபாடுகள் நடைபெற்று வந்தன. இதனால் திருத்தம்பலேஸ்வரம் என்னும் ஸ்தலம் தம்பலகாமத்தில் எழுச்சி பெற்றது.

1980ம் ஆண்டு 33 ஓமகுண்டங்கள் அமைத்து மகா கும்பாபிஷேகம் நடைபெற்ற இவ்வாலயம் அன்னியரின் வன்செயல்களினால் தாக்குண்டு நித்திய நைமித்திய வழிபாடுகள் இல்லாதிருந்த தம்பலகாமம் கோணேசர் கோயில் ஆலய பரிபாலன சபைத்தலைவர் திரு.சு.கா.சிவசுப்பிரமணியம் அவர்கள் தலைமையில் மீண்டும் புனருத்தாரணம் செய்யப்பெற்று மகாகும்பாபிஷேகம் நடைபெற்றது திருவருட் செயலேயாகும்.

குளக்கோட்டு மன்னன் வகுத்த கோணேசர் கல்வெட்டின் பிரகாரம் மீண்டும் ஆலய கைங்கரியங்கள் நடைபெறச் செய்த அனைவரையும் வாழ்த்துவோம். ஆதிகோணேசப் பெருமானுடைய ஆசிர்வாதம் அனைவருக்கும் ஆகுக.

"இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# An Architectural Beauty



Dr.Sivapalan Varatharajan
Son of Late Mr.Subramaniam Sivapalan

I arrived in Sri Lanka from Brunei Darussalam on 17 April 1999. Next day, I read in the "VIREKESARI" that Konesar Temple at Thampalakamam, Trincomalee has been restored and the Kumbabishekam ceremonies will take place on 21 April 1999.

My thoughts went back to the years 1951-1953, immediately. During this period, my father, late Mr.Subramaniam Sivapalan was the President of the Thampalakamam Konesar Temple Paripalana Sabai. A Rajagopuram was built and Kumbabishekam ceremonies were conducted.

When I was in Trincomalee from 4.5.99 to 16.05.99, I was fortunate to meet Mr.Sivasubramaniam the present President, who was my classmate many many years ago at Trincomalee. Along with the President, I went to the Thampalakamam Temple on 12.05.99. My sister-in-law, Mrs.Manohari Sriskandarajan and nieces accompanied me too.

The Rajagopuram stood very majestically. What a view it was! It was an Architectural beauty. A wall has been built round the outer Veethy. The Temple has been restored to its previous glory. I must congratulate the President and his committee on their untiring efforts to complete this great task of restoring the Temple in the midst of many difficulties.

With Lord Koneswarar's Blessings.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருத்தம்பை நகர் வாழி

வே.வரதசுந்தரம்

தம்பலகாமத்து கிராமத்துள் நுழைந்ததும் பைங்கூழ் என்று கூறப்படும் பசுமை மிக்க வயல்களை இருபுறமும் காணலாம். கரிய குவளை மலர்களை மேய்ந்து அதன் சுவையினைத் தனது கடைவாயில் ருசித்துத் தேனொழுகப் பெருமூச் செறிந்து எருமைகள் வயல்களில் கிடக்கும் வனப்புடை ஊர் தம்பலகாமம்.

கோணை ஈசனுக்குத் தொழும்பு முறைப் பூசைகளை அன்புடன் செய்து விண்ணவர் போல் இன்புற்று வாழ்பவர்கள் தம்பலகாமத்து மக்கள்! தம்பலகாமத்தையும், அவ்வூர்க் குடிமக்களையும், ஆதிகோணநாயகரையும் திரிகோணாசல புராணம் இப்படிச் சிறப்பித்துப் பாடுகிறது. இதோ அந்தப் பாடல்

கரிய குவளை மலர் மேய்ந்து
கடவாய் குதட்டித் தேன் ஒழுக
எருமை கிடந்து மூச்சு எறியும்
எழிலார் தம்பை வள நாட்டின்
உரிய கோணை யீசனுக்கு
ஆங்குற்ற தொழும்பு முறை பூசை
பரிவால் புரிந்து விண்ணவர் போல்
பாரின் வாழ்வுற்று இருந்தனரே

தம்பலகாமத்தின் பண்டைய பெயர் தம்பை நகர் என்று அறிய வருகிறோம். திரிகோணாசல புராணம் இதனை நன்கு விளக்குகிறது.

"கன்னல் வேலி வரம்புடுத்த
கழனி சூழும் தம்பைநகர்"
"குறையா வளம்சேர் தம்பைநகர்க்
கொடுபோய்க் கோயில் இயற்றுவித்தான;"

என்ற திரிகோணாசல புராண அடிகள் மூலம் இதனை அறியலாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏனைய ஆலயங்களின் வரலாறுகளிலும் பார்க்க இக்கோயிலின் வரலாற்றுக்குத் தனிச் சிறப்புண்டு.

இந்த நாட்டு தமிழ் மக்களின் தொன்மையை, அவர்கள் கண்ணெனப் பேணிய சிவநெறியின் தொன்மையை இவ்வாலய வரலாறு பறைசாற்றி நிற்கின்றது.

செந்தமிழினது தொன்மையையும் சிவநெறியின் தொன்மையையும் விரித்துக் கூறும் ஊற்றுக் கண் இக்கோயிலின் வரலாறு.

தென்கைலை எனப்படும் திருக்கோணேஸ்வரத்தின் மூல விக்கிரகம் இங்கு பேணிக் காக்கப்பட்டு பூசிக்கப்படுவதாலும், வேடுவர் காலத்துப் பூசை மரபுகள் வேள்விகள், இங்கு இன்னும் பேணப்படுவதாலும் கோயிலும் குளமுங் கண்ட குளக்கோட்டன் விதித்த நடைமுறைகள் இன்றும் இக்கோயிலில் கைக்கொள்ளப்படுவதாலும், இதனை ஆதி கோணநாயகர் ஆலயம் என்று போற்றுவது நன்கு பொருந்தும்.

வயலும் வயல் சார்ந்த நிலவளமும், நீர் வளமும் மிக்க மருத நிலமாம் தம்பலகாமம் சோறுடைத்து என்பார்கள். ஆதிகோணநாயகப் பெருமான் மருத நிலத்துத் தெய்வமாக இங்கு போற்றப்படுகிறார்.

தங்கக் குண்டு சுடுதல்

இக்கோயிலில் நிகழும் அற்புதங்களும் தனித்துவமானவை. தனியார் வாழ்விலே நிகழும் அற்புதங்களுக்கு மேலாக சமூக ரீதியான அற்புதங்களும் இங்கு நிகழத்தான் செய்கின்றன.

ஊர் வயல்களுக்கு நீர் தேவைப்படும் போது விதிப்படி பொங்கலையும், வேள்வியையும் செய்து கோணநாயகருக்கு நேர்ந்து பச்சைப் பட்டு கட்டி மழை பெய்வதும் நீர் மிகுந்து பைங்கூழ் பாதிப்புறும் போது கோணநாயகருக்கு நேர்ந்து சிவப்பு நிறப் பட்டுக் கட்டி வெயில் காய்வதும் திருத்தம்பலகாம மண்ணில் இன்றும் நிகழும் சமூக ரீதியான அற்புதமாகும்.

ஐம்பதுகளின் பிற்பகுதியில் கந்தளாய்க்குளம் பெருக்கெடுக்கும் ஆபத்து ஏற்பட்டு ஊர் மக்கள் செய்வதறியாது திகைத்த வேளை அது. கந்தளாய்க் குளம் எந்நேரம் பெருக்கெடுக்குமோ, என்னவாகுமோ என்று மக்கள் அங்கலாய்த்துக் கொண்டிருந்த காலமது.

அப்போது கோயில் தொழும்பாளர் (காரியப்பர்) தங்கக் குண்டும் துவக்கும் கையிலெடுத்துக் குளத்தினுள் இறங்கிக் கழுத்தளவு தண்ணீரில் நின்று தங்கக் குண்டை குளக்கோட்டன் நியதிப்படி சுட்டார்.

என்ன அதிசயம் நீர் வற்றி, கந்தளாய்க் குள உடைப்பும் பெருக்கெடுப்பும் தடுக்கப்பட்டது. ஊர் மக்களின் அச்சம் தவிர்ந்தது. இந்த வைபவத்தைத் "தங்கக் குண்டு சுடுதல்;"; என்று அழைப்பர்.

ஆதிகோணநாயக விக்கிரகம்

திருக்கோணேஸ்வரம் 1624ம் ஆண்டு மதவெறி பிடித்த போர்த்துக்கேயரால் இடிபாடடைந்த போது, இக்கோயிலில் இருந்த சில



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விக்கிரகங்களை பக்தர்கள் பத்திரமாக எடுத்து வந்து தம்பலகாமம் சுவாமிமலையில் வைத்திருந்து பின்னர் இக்கோயிலில் ஸ்தாபித்துப் பூசை செய்து வந்ததாக வரலாறுண்டு.

இவை சோழர் கால விக்கிரகங்களென நிர்ணயிக்கப்பட்டுள்ளது. சுவாமி விக்கிரகம் அம்மன் விக்கிரகத்திலும் சற்றுப் பிந்திய காலத்தைச் சார்ந்தது என்பார்கள்.

இராஜகோபுரம்

இக்கோயிலின் ஐந்து தள இராஜகோபுரம் 62 அடி 3 அங்குலம் நெடிதுயர்ந்து தம்பலகாமம் ஊரினுள் நுழைந்த மாத்திரத்தே எம்மை வரவேற்கும்.

கோபுர தரிசனம் கோடி புண்ணியம்
கோபுர தரிசனம் பாவ விமோசனம்

என்ற உணர்வுகள் மனதில் பரவ கோபுரத்தை வணங்கி நிற்போம்.

இராஜ கோபுரத்தின் அடித்தளம் 36 அடி 27 அங்குல விட்டம் உடையது நுழைவாயில் 16 அடி உயரம் 8 அடி அகலம் உடையது.

இக்கோயிலின் இராஜகோபுரத்துக்கான அடிக்கல் நாட்டு விழா 1951ம் ஆண்டு 8.30 மணி சுபவேளையில் நடைபெற்றது. அடிக்கல்லை அந்நாள் கல்வி அமைச்சர் க.கனகரத்தினம் நாட்டி வைத்தார். 1953ம் ஆண்டு இராஜகோபுரத்தின் முதலாம் கும்பாபிஷேக வைபவம் நடைபெற்றது.

முன்னாள் திருகோணமலை பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.சிவபாலன் தலைவராகவும், எனது தமிழ் ஆசிரியப் பெருமகன் பண்டிதர் ஐ.சரவணமுத்து அவர்கள் பொதுச் செயலாளராகவும் இருந்த பரிபாலன சபை இக்கும்பாபிஷேகத்தை நடாத்தியது.

கோயில் திருவிழாக்கள்

இக்கோயிலின் வருடாந்த மகோற்சவம் ஆனி உத்தர நன்னாளில் ஆரம்பித்துப் பதினெட்டு நாட்கள் நடைபெறும். இத்திருவிழாக்களில் கதிர்காம சுவாமித் திருவிழா முக்கியமானது - அன்றைய திருவிழாவின் போது புனித பேழையொன்று மஞ்சத்தில் இருத்தி வீதிவலம் வரும். பக்தர்களின் காவடி நடனம், அங்கப்பிரதட்சனம் ஆகியன இடம்பெறும். இப்பேழையினுள் இருப்பது இன்றும் தேவரகசியமாகவே இருக்கிறது. அது வேலாக இருக்கலாம் என்பது மக்களின் நம்பிக்கை.

இத்திருவிழாவில் இடம் பெறும் நிகழ்வுகளில் ஆதிகால மரபுகளும், கதிர்காமம், வெருகலம்பதி, சித்தாண்டி போன்ற கோயில்களின் சடங்குகளும் இடம் பெறுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழும்பாளர்களும் மானியங்களும்

கோணேசர் கல்வெட்டில் விதிக்கப்பட்டுள்ள தொழும்புப் பணிகள் இன்றும் தம்பலகாமம் ஆதி கோணநாயகர் கோயிலில் பேணப்பட்டு வருகின்றன. தானத்தார், வரிப்பத்தார், என்றும் காரியப்பர், வயிராவியர் என்றும் தொழும்பாளர்கள் அழைக்கப்படுகின்றனர்.

தொழும்பாளர்களுக்குச் செழிப்புள்ள வயல்கள் மானியமாக வழங்கப்பட்டு உள்ளமை இக்கோயிலின் தனித்துவம் எனலாம்.

குழல்காரன் கீற்று, மேளகாரன் கீற்று, மாலைகட்டு கீற்று, குருக்கள் வயல், நாவிதன் வயல், வண்ணாண் வயல், குயவன் வயல் இப்படி வயல்நிலங்கள் தொழும்பாளர்களுக்கு மானியமாக வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கோயில் அறங்காவல் அவை

இத்திருக்கோயிலின் நிர்வாகம் மூன்றாண்டுக்கொரு தடவை கோயில் பக்தர்களால் தெரிவு செய்யப்படும் அறங்காவல் அவையின் பொறுப்பில் உள்ளது.

திருகோணமலை மாவட்ட நீதிமன்ற வழக்கு இலக்கம் 8 இன் பிரகாரம் இக்கோயில் நிர்வாகம் தெரிவு செய்யப்படும் பொது அறங்காவல் அவையிடம் கையளிக்கப்பட்டது.

முதலாவது அறங்காவல் அவை 1945ம் ஆண்டு ஜன் மாதம் 15ம் திகதி பதவியேற்றது.

முதலாவது அவையில் பின்வருவோர் அங்கம் வகித்தனர்:-

த.பாலசுப்பிரமணியம் (தலைவர்), கே.சரவணமுத்து, பி.சரவணமுத்து, எஸ்.தாமோதரம்பிள்ளை, ஏ.பேச்சிமுத்து, என்.நடராஜா, கே.பொன்னம்பலம்.

1969ம் ஆண்டு பதவியேற்ற இரண்டாவது அவையில் அங்கம் வகித்தவர்கள் வருமாறு:-

எஸ்.சிவபாலன், (தலைவர்), ஐ.சரவணமுத்து (செயலாளர்), பி.இ.சரவணமுத்து, எஸ்.தாமோதரம்பிள்ளை, எம்.குமாரசேகரம், கே.குருகுலபூபாலசிங்கம், கே.அகிலேசபிள்ளை.

இவ்வவையின் காலத்தில் இராஜ கோபுரம் அமைக்கப்பட்டதுடன் வேறு சில பணிகளும் மேற்கொள்ளப்பட்டன.

கந்தளாய்க் குளத்தில் நீண்ட காலமாகச் செய்யப்பட்டுப் பின்னர் ஏறத்தாழ பதினைந்து ஆண்டுகள் கைவிடப்பட்டு இருந்த திருக்குளத்து வேள்விக்கு மீண்டும் உயிரூட்டியது இவ்வவை சடங்கினைச் செய்யும் பிடிகாரருக்கு மானியம் கொடுத்தனர். இது அவர்களது குறிப்பிடத்தக்க பணியாகும்.

திரு.காளியப்பு சிவசுப்பிரமணியம், திரு.மு.கோணாமலை செல்வராசா, திரு.ஆ.தங்கராசா ஆகியோரைத் தலைவர், செயலாளர், பொருளாளராகக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு செயற்படும் தற்போதைய அறங்காவல் அவையினரின் பதவிக்காலத்தில் இரண்டு மஹா கும்பாபிஷேகங்கள் இனிதே இடம் பெற்றன.

1980ம் ஆண்டு தை மாதம் 28ம் திகதி இராஜ கோபுரம் கண்ட கோயிலின் இரண்டாவது மஹா கும்பாபிஷேகம் நடைபெற்றது. அடுத்த கும்பாபிஷேகம் 1999ம் ஆண்டு ஏப்ரல் 21ம் திகதி இடம் பெற்றது.

இரண்டு மஹாகும்பாபிஷேக தெய்வ கைங்கரியங்களை முன்னின்று நடாத்தும் பேறு இவ்வறங் காவல் அவையினருக்குக் கிட்டியது திருவருட்சித்தமாகும். அறங்காவல் அவைத் தலைவரான திருசு.கா.சிவசுப்பிரமணியம் செயலாளர் வழக்கறிஞர் மு.கோ.செல்லராசா, பொருளாளர் ஆ.தங்கராசா ஏனைய சபை உறுப்பினர்கள் பாராட்டுக்குரியவர்கள். சபையின் உறுப்பினராக இல்லாத பொழுதிலும், இக்கோயில் கும்பாபிஷேகம் சிறப்புற அமைய ஓடியோடி உழைத்த முன்னாள் கணக்கப்பிள்ளை மு.நாகராசா அவர்களும் எமது பாராட்டுக்குரியவர்.

விஷ்ணு வழிபாடு

பிள்ளையார் வழிபாட்டினை முன் வைத்து வழிபாடுகளை ஆரம்பிக்கும் மரபு இந்துக்களிடையே காணப்படும் வேளையில் குளக்கோட்டன் கல்வெட்டு கூறும் மரபுகள் விஷ்ணுவை முதன்மைப்படுத்தக் காண்கிறோம்.

இக்கோயில் வேள்விகள், மடைகளின் போதும் ஏனைய சடங்குகளின் போதும் விஷ்ணு வழிபாடு முதன்மை பெறுவதும் இக்கோயிலின் பிறிதொரு தனித்துவமாகும்.

பாலம் போட்டாறு அம்மன் விழா

வைகாசி மாதம் வந்தால், திருக்கோணமலை மாவட்டமே களைகட்டி விடும். வைகாசிப் பூரணைக்கு முந்திய திங்களன்று திருகோணமலைப் பத்திரகாளி கோயிலிலும் அதற்கு முந்திய திங்கட்கிழமை பாலம் போட்டாறு அம்மன் கோயிலிலும் அதற்கடுத்த செவ்வாயன்று சல்லி அம்மன் கோயிலிலும் பொங்கல் நடைபெறும் அம்மன் மீது அளவு கடந்த பக்தியுடன் வழிபாடுகள் நிகழும்.

பாலம் போட்டாற்று அம்மன் கோயிற் பொங்கலன்று, திருக்கோணமலை பத்திரகாளி அம்மன் கோயிலில் இருந்தும், திருகோணமலை முத்துமாரி அம்மன் கோயிலில் இருந்தும் ஆண்கள், பெண்கள் சிறுவர் ஆயிரக் கணக்கில் யாத்திரை செல்வர்.

ஆண்டில் ஒரு தடவை நிகழும் இவ்விழாவில் தம்பலகாமம் கோணநாயகர் கோயிலின் பங்களிப்பு சிறப்பானது. பாலம் போட்டாற்று அம்மன் கோயில் விக்கிரகம் பாதுகாப்புக் கருதி தம்பலகாமம் கோணநாயகர் கோயிலில் வைக்கப்பட்டுள்ளது.

இவ்விக்கிரகம் அவ்விழாவன்று தம்பலகாமம் கோணநாயகர் கோயிலில் இருந்து காட்டின் மத்தியில் உள்ள பாலம் போட்டாற்று அம்மன் கோயிலுக்கு எடுத்துச் செல்லப்பட்டு இரவு முழுவதும் பொங்கலும் பூசைகளும் நடைபெற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்த நாள் திரும்பவும் தம்பலகாமம் கோணநாயகர் கோயிலுக்கு எடுத்துச் செல்லப்படும்.

கங்கைத்துறை தீர்த்தம்

அதே போன்று ஆடி அமாவாசைத் தீர்த்த நன்னாளன்று மூதூர் மாவட்டம் களை கட்டும். மகாவலி கங்கை கடலில் சங்கமமாகும் கங்கைத் துறைக்குத் தம்பலகாமம் கோணநாயகர் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்படுவார்.

இரவு முழுவதும் அவர் ஆலங்கேணி அருள்மிகு விநாயகர் கோயிலில் தங்கியிருப்பார். இரவு முழுதும் பக்தர்கள் கூடி வழிபாடுகள் நடைபெறும். விடிந்ததும் கங்கைத் துறையில் தீர்த்தமாடி கோணநாயகர் திருத்தம்பலகாமக் கோயில் திரும்பிச் செல்வார்.

இவ்வாறு திருகோணமலை மூதூர் ஆகிய இரு மாவட்டங்களிலும் நடைபெறும் இரு சமய விழாக்களிலும் தம்பலகாமம் கோணநாயகர் ஆலயம் மையமாகத் திகழ்கிறது.

திருக்குடமுழுக்கு கண்ட ஆதிகோணநாயகர் திருவருள் பெற்று யாம் உய்தி பெறுவோமாக!

பார் வாழி மன்னவர் தம் செங்கோல் வாழி
பழமறை அந்தணர் வாழி பசுக்கள் வாழி
ஏர் வாழி மங்கையர்கள் கற்பு வாழி
எங்கோமான் அடியார்கள் வாழி கோணை
ஊர் வாழி திருத்தம்பை நகரம் வாழி
ஓதரும் இப்புராண முறை வாழி ஓவில்
சீர் வாழி பிடியன மெண்ணடையாள் வாழி
திரிகோண நாதன் அருள் வாழிதானே

தம்பைநகர்ப்படலம் - திரிகோணாசலபுராணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிலையான அர்த்தங்களும் நியாயமான வாதங்களும்



சி.உதயநாயகம்

இந்து மதம் - அர்த்தமுள்ள மதம். இது மிகவும் பழமையானது. பல்வேறு மதங்கள் தோன்றி மறைந்தாலும், பல வேறுபட்ட மதங்கள் ஒன்றோடு ஒன்று சங்கமித்துக் கொண்டாலும், இந்து மதம் மட்டுமே தனித்து விளங்குவதற்கான காரணம், இந்து மதத்திலுள்ள அடிப்படைத் தத்துவங்களும், திடமான கொள்கைகளும் தான்.

இந்து மதம் பல படைப்புக்களைக் கவசமாகக் கொண்டுள்ளது. அவற்றுள் வேதங்கள், புராணங்கள், இதிகாசங்கள், சமய வரலாறுகள் அடங்கும். இந்த இதிகாசங்களில் இன்றும் பெயருடன், புகழுடன் விளங்கும் காவியங்கள் இராமாயணமும்,மஹாபாரதமும் ஆகும்.

இக்காவியங்களில் வருகின்ற கதாபாத்திரங்களில் ஒரு குடும்பத்தின் பாசப்பிணைப்புக்களையும் ஒற்றுமை வேற்றுமைகளையும் ஏற்றம் இறக்கங்களையும் ஊடல் அன்புக்கூடல்களையும் காணக்கூடியதாகவும் அதே சமயத்தில் தூய்மையான அரசியல் வழிமுறைகளையும் சாணக்கியத் தன்மைகளையும், அரசியல் நுணுக்கங்களையும் இங்கிருந்து பாடமாக கற்றுக் கொள்ளவும் முடிகின்றது. நீதி, நியாயங்களுக்கு இங்கு ஒரு பகவத்கீதையும் உண்டு.

இன்றைய அறிவியல் உலகில் நாம் காணக்கூடிய பல விஞ்ஞான சாதனைகளுக்கான உத்வேகங்களும், எண்ணங்களும் இத்தகைய இதிகாசத்திலுள்ள ஒரு சில சம்பவங்களிலிருந்து கூடத் தோன்றியிருக்கலாம்.

பாரதத்தில் திருதராட்டினன் போரை ரசித்த தொலைநோக்குக் காட்சிக்கு இன்றைய சட்லைட்டை ஒரு காட்சியாகவும், இராமாயணத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராவணண் சீதையைக் கடத்தியதின் தாக்கத்துக்கு இன்றைய விமான வழி மார்க்கத்தையும், அன்று நடந்த யுத்தமுனைகளின் யுத்திகளுக்கு இன்று நடக்கும் ஏவுகணைகளின் சக்திகளையும் ஒரு சில உதாரணமாக எடுத்துக் கூறலாம்

இந்து மத வழிபாட்டில் உருவ வழிபாட்டு முறை முக்கியமானதொன்றாகும். ஒரு உருவம் நம் மனதில் ஆழமாகப் பதிவதற்கு நம் முன்னோர்களால் உருவாக்கப்பட்ட பழக்கமும் வழக்கமும காரணம் ஆகலாம். இந்த வழிமுறையைத்தான் இன்றைய கல்வி முறையும் போதிக்கின்றது. ஐந்து வயதில் ஒரு உருவத்தை வர்ணமாக தீட்டிப் பாடமாக மனதில் பதிக்கும் மாணவனுக்கு அது ஐம்பது வயதிலும் மனப்பாடமாக அமைந்து விடுகின்றது. நாம் வணங்கும் ஒவ்வொரு தெய்வத்திற்கும் வெவ்வேறு உருவங்கள் இருந்தாலும் ஒவ்வொன்றுக்கும் அர்த்தங்கள் உண்டு. இவை நம் மனதுகளில் நிலைத்து நிற்பதுமுண்டு.

இந்து மத வழிபாட்டில் மற்றுமொரு சிறப்பம்சம் - தெய்வங்களின் உறவு முறைகளாகும் 'தாய்தந்தை', 'அண்ணன் தம்பி உறவு", 'தந்தை மகன் உறவு என்று பலவுண்டு. இந்த உறவு முறை சகோதரப் பாசத்தை, பந்த பாசத்தை, பக்தியை, மரியாதையை, உறவு பற்றுதலை, நெருக்கங்களை தோற்றுவிக்கின்றன. எமது வாழ்வில் தொடரும் உறவுகளுக்கு அர்த்தங்களையும் உணர்த்துகின்றன.

இந்து மதச் சடங்குகளிலும் தெய்வ வழிபாடுகளிலும் விதிமுறைகளை கடைப்பிடித்து வருகின்றோம். காலநேரங்களையும் நாள் நட்சத்திரங்களையும் வகுத்தும் கணித்தும் வாழ்வை நடத்துகின்றோம். இதில் அர்த்தத்தையும் புரிந்து கொள்கிறோம்.

நாம் பின்பற்றும் விரதங்களுக்கும், நோன்புகளுக்கும் அர்த்தங்கள் உண்டு. இன்றைய மருத்துவ உலகில் விளக்கமும் உண்டு. அன்று உடல்களில் 'வேல் பாய்ச்சி முள் தரித்து" செய்த நேர்த்திக் கடன்களை இன்று சீன மருத்துவ முறையான "அக்குபெஞ்சர்' நினைவு படுத்துகின்றன.

இந்து மதத்திலுள்ள ஒவ்வொரு செயலிலும் அர்த்தங்கள் உள்ளது. எந்தத் துறையை எடுத்தாலும் அங்கு இந்து மதம் இருக்கும். அதனால் தான் இந்த நூற்றாண்டிலும் இந்து மதம் தலைநிமிர்ந்து நிற்பதற்குக் காரணம் நிலையான அர்த்தங்களும் நியாயமான வாதங்களுமாகும்.

இந்துமதம் - அர்த்தமுள்ள மதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓயாது நினையே
# நாடுமென் நினைவே



தம்பலகாமம் தந்த தமிழறிஞர்

**கலாநிதி சி.சத்தியமூர்த்தி**

ஓங்கில் மீன்களும் வலம்வந்து வணங்கும்
கோணமா மலையில் நின்றுநான் காண
அலைகடல் நடுவண் செல்கலம் ஒக்கும்
அழகிய நகரே!அழகிய நகரே!
பண்டைநாட் பாண்டியன் பாங்குடன் பொறித்த
கெண்டை இரண்டும் கண்களாய்க் கொண்டனை!
பற்பல நாட்டின் கப்பல்கள் நிற்கும்
பொற்புடை இயற்கைத் துறைமுகம் பெற்றனை!
மாபெருந் தவத்தின் சம்பந்தன் தொடுத்த
தேவாரத் தீந்தமிழ் மாலை பூண்டனை!
அருண கிரியார் உருகிப் பாடும்
திருப்புகழ் கேட்டுப் பெருமகிழ் வுற்றனை!
சாணையில் கிடந்தும் ஏணையில் துயின்றும்
தவழ்ந்தும் நடந்தும் தாயுன் மடியில்
செந்தமிழ் மழலை சிறப்புறப் பேசிய
அந்தநாட் குழந்தைப் பருவ நினைவெலாம்
இன்றும் சிந்தையுள் நின்றின் புறுத்தும்
எழுவகை வெந்நீர் கண்ணியாய் ஊற்றில்
பழுதற மூழ்கி உடல்மா சொழித்து
மாவலி கங்கை வந்துடன் கலக்கத்
தானொலி குறையாத் தண்கடல் மோதும்
உமையொரு பாகன் உவந்துறை குன்றில்
மாந்தர் எறிந்த தேங்காய்ச் சொட்டு
மாந்தித் தாவும் மந்திதன் குறும்பால்
சிந்துறும் இலந்தைச் செந்நிறக் கனிகள்
அக்கனி தாக்கச் சிதைந்து சொட்டும்
கொம்புத் தேனைக் கொம்புமான் சுவைக்கும்
குன்றா வனப்பின் கோவில் கும்பிட்டு
நன்றென் மனமாசும் தான்தீர்த் ததனால்
தாயகம் வந்து தங்கி வாழினும்
ஓயாது நினையே நாடுமென் நினைவே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோயிலின் பெருமை

திலகவதி ஆறுமுகம்

போர்த்துக்கேசரின் பண்பாடற்ற செயலால் தேவாரம் பாடல் பெற்ற திருக்கோணேஸ்வர ஆலயத்தை இடித்து அழிக்க முற்பட்டபோது அங்கிருந்த பாசுபதர்களும் தொழும்பாளர்களும் ஆலயத்தில் இருந்த திருவுருவங்களை எடுத்துச் சென்று கிணறு குளங்களில் போட்டும் நிலத்தில் புதைத்தும் பாதுகாத்தார்கள் என்றும் அதில் ஆதி கோணேஸ்வரரின் திரு உருவத்தை தம்பலகாமத்தில் உள்ள சுவாமி மலையில் வைத்துப் பூஜித்து வந்தார்களென்றும் வரலாறு கூறுகின்றது. அந்தத் திருவுருவம் தான் பின் தம்பலகாமம் கோயில் குடியிருப்பில் உள்ள ஆதிகோணேஸ்வரர் ஆலயத்தில் ஸ்தாபித்துப் பூஜித்து வந்ததாக அறியப்படுகிறது.

கோணேசர் கல்வெட்டுப் பிரகாரம் குளக்கோட்டு மன்னன் கோவிற் திருப்பணிகள் நிறைவேற்றிய பின்னர் அக்கோவில்களைப் பராமரிப்பதற்காக நெல் விதைப்புக் காணிகளை காடுகள் அழித்து உண்டாக்கியதையும் அவற்றிற்கு நீர் பாய்ச்சுவதற்காக கந்தளாய்க் குளம் அல்லைக் குளம், வெண்டரசன் குளம் போன்ற குளங்களைக் கட்டுவித்து விளைநிலங்களில் குடி இருத்துவதற்காக தென்னாட்டில் உள்ள மதுரை, மருங்கூர், காரைக்கால், திருநெல்வேலி போன்ற இடங்களில் இருந்து குடிமக்களை அழைத்து குடியமர்த்தி அவர்கட்கு மானியங்கள் வழங்கியதாகவும் அறிய வருகிறது. தம்பலகாமப்பற்று, கொட்டியாரப்பற்று, கட்டுக்குளப்பற்று என்பவைகளில் குடியமர்த்தப்பட்ட குடிமக்களின் கடமைகளும் உரிமைகளும் எவையென்பதையும் அவர்களின் தொழும்புகளையும் கோணேசர் கோவிலைப் பயபக்தியுடன் பாவிக்கப்படவேண்டிய முறைகளையும் கோவில் தொழும்பாளர்களின் கடமைகளையும் நன்கு விளக்கமாக விபரிக்கின்றது கோணேசர் கல்வெட்டு.

கோடீஸ்வரரான தம்பலமாமம் ஆதி கோணேஸ்வரர் தனக்கே உரிய தனித்துவமான கிரியைகளையும் செயல்பாடுகளையும் பழக்க வழக்கங்களையும் தாம் அருள்பாலிக்கும் மக்களிடையே பரப்பியுள்ளார் என்பது யாவரும் அறிந்த உண்மை. எமது மூதாதையரில் பலர் செல்வந்தர்கள்,வாரிசுஇல்லாதவர்கள்,பக்திமான்கள், தமது ஆதனங்களை ஆதிகோணநாதருக்கே மானியமாக வழங்கியுள்ளார்கள் என்பது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளிடைமலை பல ஆயிரக்கணக்கான ஏக்கர்களைக் கொண்ட புராண வயல் என்னும் தலைப்பின் கீழ் இன்றும் கந்தளாய் தம்பலகாமப்பகுதியில் உள்ளன.

ஆலயத்தில் தம்பலகாமம் ஆதி கோணநாயகர் செயல்பாடுகிராமம் செழிக்க ஆண்டுதோறும் வேள்வி செய்வது அல்லது மடைபோடுவது வழக்கம் இராஜ மேளம், கும்பம், கரகம் எடுப்பது நீர்ப்பாசனத்திற்கு மழை இல்லாதபோது கோணநாதருக்கு பச்சை பட்டு சாத்துவது வெப்பம் தேவையெனில் சிவப்புப்பட்டு சாத்துவது திருவிழாக்காலங்களில் திருவிளக்கோடு பாடி அபிநயம் செய்தல், வைரவ அலகிடுதல் போன்ற சில கைங்கரியங்கள் உரிய தனித்துவம் வாய்ந்த செயலாகும்.

நம் குலதெய்வம் தம்பலகாமம் ஆதி கோணநாதாஹம்சனாம்பிகா சமேதராய் மீண்டும் தம்பலகாமத்தையும் குடிமக்களையும் சீர்படுத்தவும் அருள்பாலிக்கவும் எண்ணம் கொண்டு மீண்டும் ஆலயத்தைப் புனர் நிர்மாணம் செய்யும் ஆர்வத்தை மக்களினதும் தர்மகர்த்தா சபையினதும் சிந்தையில் தோற்றுவித்தார். அதன் எதிரொலியாக நல்ல சீரான முறையில் ஆலயம் புனர் நிர்மாணம் செய்யப்பட்டு புதுப் பொலிவு பெற்றது.

இதன் பிரதிபலன் 21.04.99ல் பக்த கோடிகளின் காட்சியில் மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது. ஐயன் அருள் பாலித்துள்ளார். இத்தகைய சிறப்பு மிக்க எமது குல தெய்வத்தின் கிருபையை அருளை அணையாது முழுமையாகப் பெறத் தம்பலகாம மக்களாகிய நாம் முயற்சி செய்வது எமது பாரிய கடமையாகும்.



கும்பாபிடேக விழாவில்....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துயர் தீர்க்கும் தூமணியே

கந்தளாய் நீரோடி வந்து
கழனிகளை முத்தமிடும்
சிந்தனை செய்து இருப்போர்க்கு
செல்வம் வளம் நல்கி
வந்தனை எந்நாளும்
வழிபாடும் செய்து விட்டால்
எந்தனைக் காத்திடுவான்
எம்மூரில் குடியிருக்கும் கோணநாதன்

த.சிவராஜசிங்கம்
புதுக்குடியிருப்பு
தம்பலகாமம்

அன்றொரு நாள் - ஆலயத்தை
ஆக்கி வைத்தான் குளக்கோட்டன்
இன்றும் அவன் புகழே
நெஞ்செல்லாம் ஒலிக்கிறது
கன்றுக்குக் தாய் போன்று
காக்கும் ஹம்ஷனாம்பிகையாள்
என்றும் அருள் கொடுத்து
எங்கும் நிறைந் திருப்பாள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எத்தனையோ இடர் வந்து
எமைச்சூழ்ந்த போதினிலும்
அத்தனையும் நீறாக்கி
அடியோரைக் காக்கும்
பக்திசெய்து துதிப்போர்க்கு
பற்பல செல்வமருள்
முத்தன் பரம்பொருளை
முப்போதும் துதித்திடுவோம்

சீரழிந்த ஆலயத்தில்
கும்பாபிஷேகம் செய்ய
போர்க்காலச் சூழலிலே
போன பொருள் சேகரித்து
ஆர்க்கும் மணியோசை கேட்க
அயராதழைத்த சபையினர்க்கு
தீர்க்கமாம் அவர் பணிக்கு
திருக்கோண நாதனருள் சேரும்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓம் ஸ்ரீ கிருஷ்ணாய பரப்பிரஹ்மனே நம



நாகராஜா.கணபதிப்பிள்ளை

## கண்ணனின் கீதாம்மிருதம்

"ஹிருதயம் பரிசுத்தமாக இருந்தால் புத்தி தெளிவாகத் தோன்றும். தெளிந்த புத்தியுடன் செய்யும் கருமங்கள் யாதாயினும் நற் செய்கைகளாகவேயிருக்கும், நன்றாகவே முடியும். ஆகையால் ஹிருதயத்தை தெளிவு படுத்திக் கொள்." இச்செய்தியினை அர்ச்சுனனுக்கு மட்டுமல்ல அவனை கருவியாக வைத்தே பிறவியெடுத்த நம்மெல்லோருக்கும் பகவத் கீதையின் மூலம் அறிவுறுத்துகிறான் கண்ணன். இது பகவான் கிருஷ்ணன் நமக்குத் தந்த தெய்வீகப் பரிசு.

வஞ்சக எண்ணமுடைய, புத்தி நாசமடைந்து நிலை தடுமாறிய துரியோதனன் தன் பக்கம் தக்க படை பலம் இருந்தும் அத்தோடு துவாரகைக்கு அரசனாகிய கிருஷ்ணனிடமிருந்து பெற்ற அக்ரோணி சேனைகள் இருந்தும் பயத்தின் காரணமாக பீஷ்மரால் காக்கப்படுகின்ற சேனைகள் வெற்றி பெறுவதற்கு போதாது, எதிரியாக நிற்கும் பீமனால் காக்கப்படுகின்ற பாண்டவர்களின் சேனை மிகவும் சக்தி வாய்ந்தது என துரோணாச்சாரியரைப் பார்த்து ஏளனமாகக் கூறி என் பக்கத்தில் போரிட நிற்கும் நீங்கள் எல்லோரும் பீஷ்மரையே ஜாக்கிரதையாக காத்தருளுங்கள் என உத்தரவு பிறப்பிக்கின்றான். தெளிந்த புத்தியில்லாதவனின் எண்ணங்களும் செயற்பாடுகளும் எப்பொழுதும் குழப்பமாகவேயிருக்கும் என்பதை தன் குருவாகிய துரோணாச்சாரியரை அவமானப்படுத்தும் வார்த்தைகளைப் பேசி துன்புறுத்தியதிலிருந்தே உணரக்கூடியதாகவுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லவன், மகாவீரன், வில்வித்தையில் தனக்கு நிகரில்லாதவன், கருணையுள்ளவன், பேராசையற்றவன், பாவச்செயல்களை விரும்பாதவன் எனப் புகழ்பெற்ற பாண்டவ குலத் தோன்றலாகிய அருச்சுணனும் கூட தெளிவற்ற மந்த நிலையிலிருந்து விடுபடாதவனாகவே தோன்றுகிறான். தன்னை அறியாதவன் தன் தலைவனை அறியமாட்டான். நான் யார்? எதற்காக இந்தப் போருக்கு வந்தேன்? என்னை யார் இந்தப் போரை வழி நடத்தச் சொன்னது? நண்பன் கிருஷ்ணனா, பாண்டவரில் முத்தவரான தருமரா? அல்லது சக பாண்டவர்களா? துகிலுரியப்பட்டு கூந்தலை முடிக்காமலிருக்கும் மனைவி திரௌபதியா, குந்திதேவியா இல்லை துர்மதியாளர்களின் அராஜகத்தில் சிக்கித் தவிக்கும் நாட்டு மக்களா? யார் என்பதையே உணரக் கூட முடியாதவனாக தடுமாற்றமடைந்த அர்ச்சுணன் கண்களுக்கு நல்லவர்களைக் காப்பதற்கும் தீயவர்களைக்கரந்தொடுக்குவதற்கும் தருமத்தை நிலை நாட்டுவதற்கும் யுகம் யுகமாக தன்னை தன் யோக மாயையினால் உலகிற்கு தருவித்து எந்தப்பலனையும் எதிர்பாராது தர்மத்தை நிலைநாட்டும் ஒரு செயலுக்காகவே வந்து எத்தொழிலையும் ஆற்றக் கடமைப்பட்டிருக்கின்றேன் என்ற கோட்பாட்டிற்கிணங்க ஒரு தேரோட்டியாக வந்து அர்ச்சுணனுக்கு உதவிக்கரம் நீட்டிக் கொண்டிருக்கின்ற பரப்பிரம்மமாகிய பரந்தாமன் கிருஷ்ணனை அர்ச்சுணன் எப்படித் தெரிந்து கொள்வான்!

சம புத்தியற்று ஜீவாத்மா பரமாத்ம பேதத்தையே உணர முடியாத தெளிவற்ற புத்தியையுடைய அர்ச்சுணன் போர் புரிய மாட்டேன் என்று போர்க்களத்திலேயே அம்புகளையும் வில்லையும் எறிந்து விட்டு பெரும் துயரத்தால் மனமொடிந்த நிலையில் தேர்த்தட்டின் மேல் சோர்ந்து விழுந்ததில் நியாயம் இருக்கவே செய்கின்றது!

அவன் துயரத்திற்கு காரணமே அவனிடம் எல்லாமிருந்தும் தன்னை உணரும் தன் ஆத்மனை உணரும் ஜீவ இரகசியமான ஆத்ம ஞானம் இல்லாமையே! அவனது வாழ்வில் உலக வாழ்வினில் சிறப்பாக வாழ்க்கையை நடாத்துவதற்குரிய தத்துவங்களையறிய உதவிடும் பல தரப்பட்ட குருமார்கள் இருந்திருக்கலாம் மற்றும் குரு குல வாசத்தில் அவன் பெற்ற அனுபவங்களும், பெறுபேறுகளும், துரோணாச்சாரியரிடமிருந்து பெற்ற அளப்பரிய வில்வித்தையும் பல போர்க்களங்களில் பெற்ற வெற்றிகளும் அஸ்வமேதயாகத்தினூடாக அடைந்த பெருமையும் தபோதனர்களிடமிருந்து பெற்ற மந்திர தீட்சைகளும் பிறர் கண்களுக்குத் தெரியாமல் தன்னை மறைத்து வாழும் அற்புதச் சித்துக்களும் எல்லாவற்றிற்கும் மேலாக முழுமுதற் பொருளாகிய சிவபெருமானோடேயே மல்யுத்தம் புரிந்து ஈற்றில் பரம் பொருளை யாரெனப் புரிந்து அப்பரத்தின் கருணையோடு பெற்ற பாசுபதாஸ்திரமும் இவைகள் எல்லாம் இருந்துமே அவனுக்கு ஒன்றுமே பயன்படாது போனது விந்தையிலும் விந்தையே. ஆத்மஞானம் இல்லாமை அவனது ஐம்புலன்களையே மறைத்து விட்டது. தன்னை சுக துக்கங்களுக்கு உட்பட்ட ஒரு சாதாரண மனிதனாகவே கணித்துக் கொண்டான்.

தன்முன் நிற்பவன் தன் தேர்ச்சாரதி, பலகலைகளில் வல்லவன், வியப்பை உண்டாக்கும் சித்து விளையாட்டுக்களில் கைதேர்ந்தவன், பாலப் பருவத்திலேயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல அரக்கர்களை அழித்தவன், தன்னைக் கொல்ல வந்த வஞ்சகக் கம்சனை வதம் செய்தவன்; ஆயர் குலப் பாலகர்களுடனும் ஆயர் சிறுமிகளுடனும் கை கோத்து விளையாடியவன்; பாண்டவர்களிடம் அன்பு பூண்டவன், தன் தங்கையை தனக்கு திருமணம் செய்து வைத்தவன், தன்னுடைய உயிர்த்தோழன் இப்பொழுது சகலவற்றையும் இழந்து நிற்கின்ற பாண்டவர்களுக்கு தர்மத்தின் பேரால் உதவுவதற்காக அபயக்கரம் நீட்டி ஆயுதம் எடுத்துப் போர் புரிய மாட்டேன் என்ற நிலைப்பாட்டினைக் கொண்டிருந்தும், ஆயுதம் தாங்காத தேர்ப்பாகனாக தனக்கு தேர் ஓட்டுவதற்காக வந்து நிற்கின்றவன் தன் புத்திக் கூர்மையினால் தங்களைக் காப்பாற்றக் கூடியவன் என்பதைத் தவிர கிருஷ்ணன் சாட்சாத் பரப்பிரம்மமாகிய திருமாலின் அவதாரம் என்பதை முற்றாக உணராதவனாகவேயிருந்தான். மாயை அவனை முற்றாகவே மூடியிருந்தது.

இரக்க மேலீட்டால் நான் போர் புரிய மாட்டேன் பூஜிக்க வேண்டியவர்களாகிய பீஷ்மரையும் துரோணரையும் எங்கனம் எதிர்ப்பேன் புத்தியில்லாமல் செயல்படுகின்ற என் சகோதரர்களாகிய துரியோதனாதியர்களை கொன்று விட்டு அந்த இரத்தத்தினால் பெறுகின்ற இராச்சியம் நமக்கு என்ன பயனைத் தரும் கண்ணா எனப் புலம்பியவாறு இரக்க மேலீட்டால் என் இயற்கைக் குணங்கள் அழிந்து பட்டு விட்டன. என் கடமைகள் எது என்றே புத்தி தடுமாறி நிற்கின்றேன். என்னைக் காப்பாற்று எனக்கு எது சிறந்த நன்மையைத் தருமோ அதை நிச்சயித்துக் கூறு! நான் உன் சீடன் உன்னைச் சரணடைகிறேன் நான் எது செய்ய வேண்டுமெனக் கட்டளையிடு என்று கிருஷ்ணனை சரணடைகின்றான் அர்ச்சுணன்.

56372

வேதங்களுக்கும் சாஸ்திரங்களுக்கும் மூலப்பொருளாக விளங்கும் பரப்பிரம்மமாகிய மகா விஷ்ணுவின் அவதாரமாக உதித்த கிருஷ்ணன் பூரணமான தெளிவில்லாத அர்ச்சுணனுக்கு முற்றிலும் தன்னைக் காட்டிக் கொள்ளாது படிப்படியாக அவனது அறியாமையைப் போக்க முயற்சித்து அருச்சுணனின் மனம் போனபடியே அவனைப் பேச வைத்து அவனிடமிருந்த சந்தேகங்கள் யாவற்றையும் கேட்க வைத்து அவைகளுக்குரிய தெளிவையையும் அருளி ஸாங்கிய யோக விளக்கத்தின் மூலம் சமநிலையில் நின்று செயலாற்றும் வல்லமை பொருந்திய ஸ்திதப்பிரஜ்ஞனின் லட்சணங்களை பூரணமாக விளக்கி ஒரு ஞான குரு இல்லாமல் எதனையும் அறிய முடியாது பெற முடியாது என்ற உண்மையை உணர்த்தி கர்ம யோக விளக்கத்தின் மூலம் கர்மத்தின் செயற்பாட்டினையும் கர்மத்தின் பலனில் பற்று வைக்காமல் வாழ்பவனே உண்மையான துறவி அவனே யோகி என்பதனை புரிய வைத்து ஞான கர்ம சந்நியாச யோகம், சந்நியாச யோகம், தியான யோகம், ஞான விஞ்ஞான யோகம்; பிரம்மத்தை அறியும் அஷரப்பிரம்மயோகம் முதலியவைகளையும் விளக்குகின்றார்.

இதனைத் தொடர்ந்து கீதா உபதேசத்தின் இருதயமாகிய ராஜா வித்யா ராஜகுஹ்ய யோகத்தில் தான் குருவின் அவசியத்தையும் குரு தருகின்ற உபதேசமாகிய பிரம்ம வித்தையின் பூரணத்துவத்தையும் விளக்கி இந்த தர்மத்தோடு கூடிய ராஜ வித்தையை அருச்சணனுக்கு பிரம்ம தீட்சையாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருளுகின்றார். இந்த ஆத்ம ஞானம் தான் இறைவனை அடையும் ஒரே வழி என உணர்பவன் இதற்காக மட்டுமே தன்னை அர்ப்பணிப்பான். அத்தகையோனுக்கு இந்த ஞானம் கை கூடியே ஆகும். இதனை அடையும் ஒரே வழி இருளில் இருந்து ஒளிக்கு அழைத்துச் செல்லும் குருவை நாட வேண்டியது ஒன்றே. இந்த யோகத்தில் கடவுளின் தன்மையையும் பெருமையையும் பக்தர்கள் அனைவரும் தங்கள் ஒவ்வொருவரது செயல்களையும் கடவுளுக்கு அர்ப்பணம் செய்து விட்டு மற்ற எல்லா விடயங்களையும் துறந்து விட்டு கடவுள் ஒருவரிலேயே நிலைத்திருப்பவன் எத்தனை பாவங்கள் செய்திருப்பினும் நல்லோன் எனக் கருதப்பட்டு கடவுளையே அடைவான் என்ற உண்மையை உணர்த்துகின்றார்.

பகவான் அர்ச்சுணனிடம், அர்ச்சுணா எதை அறிந்து அஞ்ஞானமாகிய தீமையிலிருந்து விடுபடுவாயோ அப்படிப்பட்ட இந்த மிக்க இரகசியமானதும் விஞ்ஞானத்துடன் கூடியதுமாகிய ஞானத்தை பொறாமையில்லாத உனக்கு எடுத்துரைப்பேன்:-

இது:- ராஜ வித்யா ராஜகுஹ்யம் பவித்திரமிதமுத்தமம்
ப்ரத்யஷாவகமம் தர்ம்யம் ஸுஸுகம் கர்த்துமவ்யயம்

இந்த ஞானம் வித்தைகளுக்கரசன் (ராஜவித்தை) இரகசியங்களுக்குள் மேலானது, உத்தமமானது, தூய்மை தருதலில் தலை சிறந்தது, கண் கூடாக உணர்தற்குரியது, தர்மத்தினின்று பிறழாதது, அனுஷ்டித்தற்கு மிகவும் எளியது, என்றும் அழியாதது என விளக்கினார்.

இதனைத் தொடர்ந்து விபூதி யோகத்தின் மூலம் கடவுளே எல்லாவற்றிற்கும் பிறப்பிடம் அவரே சாசுவதமான பொருள், அழியா வீடு, பிறப்பில்லாதவர், உயிர்கள் எல்லாவற்றிலும் உறைந்திருக்கும் ஆத்மா, அவரே இந்திரனாகவும், சங்கரனாகவும், மேருமலையாகவும், ஓரெழுத்தாகிய ஓம் என்ற பிரணவமாகவும், இமயமலையாகவும், வீரர்களில் ராமனாகவும், சேனைத்தலைவர்களில் ஸ்கந்தனாகவும், 'அ' என்ற முதலெழுத்தாகவும், மார்கழியாகவும், இன்னும் அவரின் பெருமைகளை முற்றாக விளக்கப்படுத்த முடியாத நிலைகளையும் எடுத்தியம்பி விட்டு, தன் இத்தனை பெருமைகளையும் கேட்டு, பகவானின் பூர்ண விஸ்வரூபத்தைக் காண வேண்டுமென விருப்பங் கொண்ட அர்ச்சுணனுக்கு தன் திவ்யமான விஸ்வரூபத்தைக் காண்பதற்கு வேண்டிய ஞானக் கண்களைக் கொடுத்து தன் பூரண உருவத்தை கருணையுள்ள பகவான் காட்டியருளினார்.

வையகம் முழுவதையும் ஒருங்கே கண்ட அருச்சுணன் பகவானின் உருவத்தை பல நூறாகவும், பல்லாயிரமாகவும பார்த்த பார்த்தன், யாரை நான் கொன்று பாவத்தை சம்பாதிக்கப் போகின்றேனோ என மதி மயங்கிய நிலையில் தடுமாறி அவர்களுக்கு இரங்கி சிந்தித்துக் கொண்டிருந்தேனோ அவர்கள் ஒவ்வொருவரும் திருதராஷ்டிர புத்திரர்கள் துரியோதனன் உட்பட வேந்தர்கூட்டங்களுடனும், பீஷ்மர், துரோணர் மற்றும் நம் பக்கத்து வீரர்கள் எல்லோருமே, பகவானின் பயங்கரமான கோரப்பற்களுடைய வாய்க்குள் பரபரப்புடன் பிரவேசிக்கின்றதைப் பார்வையுற்ற அர்ச்சுணன், வியப்புற்று, பயந்து,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுநடுங்கி தன் செயலால் ஒன்றும் நடப்பதில்லை என்ற உண்மையை, மிக இலகுவில் தெரிந்து, தெளிவுற்று, தொடர்ந்தும் பகவானின் கோர உருவத்தை பார்க்க முடியாதவனாகி, சிரந்தாழ்த்தி வணங்கி, சர்வேசுவரா மீண்டும் உமது திவ்யமான சுய ரூபத்தைக் காட்டுக என இறைஞ்சி அழுது வேண்டுகிறான். அருச்சுணன் மீது இரக்கம் கொண்ட ஈஸ்வரன் அவன் வேண்டுகோளை ஏற்று, தனது விஸ்வரூபத்தை சுருக்கி சங்குசக்கரதாரியாக சாட்சியளித்து பின்பு தன் தேரோட்டி கிருஷ்ணன் உருவத்தைக் காட்டியருளினார். தேவர்களாலும் காண முடியாத தன் உருவத்தை கண்ணுற்ற அர்ச்சுணனுக்கு வேறு எதிலும் நாட்டமில்லாத பக்தி ஒன்றினால் மட்டும் தான் தன்னை உள்ளபடி காணவும் அடையவும் முடியவும் என்பதனை பகவான் விளக்கியருளினார்.

பின்பு மயக்கத்திலிருந்து விடுபட்ட அர்ச்சுணனுக்கு மீண்டும் பக்தியோகம், உடல் என்னும் ஷேத்திரத்தைப்பற்றியும், அதனுள் உறையும் ஷேத்திரஜ்ஞனைப்பற்றிய ஷேதர ஷேத்ரஜ்ஞ விபாக யோகம், உடலின் உறவு நீங்கிய பின்னர் அடையும் உயர்ந்த சித்தியை அடையும் குணத்ரய விபாக யோகம், புருஷோத்தம யோகம், சாஸ்த்திரங்கள், தவம், நேர்மை முதலியவற்றை அறியும் தைவாஸ"ரசம்பத் விபாக யோகம், சாத்வீகம், ராஜஸம், தாமஸம் முதலியவற்றை விளக்கும் ச்ரத்தாத்ரய விபாக யோகம், இறுதியாக பிரம்ம வித்தையின் பொருளை, தன்மையை அறிந்து பயிற்சியின் மூலம் பிரம்ம நிர்வாணம் அடைந்து, பூரணசரணாகதியின் பெறுகின்ற ஆத்ம சுகத்தினை விளக்கும் மோஷ ஸந்நியாச யோகத்தினையும் உபதேசித்தருளினார்.

பூரண சரணாகதி ஒன்றினால் மட்டும் தான் இறைவனிடம் தீராத, மாறாத பக்தி ஏற்படும். எல்லா உயிர்களையும் சமமாகக் கருதி அன்பு செலுத்த முடியும். அவனது அருளால் விடுதலையடைந்து உயர்ந்த அமைதியையும் அழிவற்ற இறைபதத்தையும் அடையமுடியும் என்ற உண்மை நிலையை அருளினார். இந்தப் பூரண நிலையை அடைவதற்கு ஆயிரத்தில் ஒருவன்தான் முயல்கின்றான். அவ்வாறு முயல்பவருள்ளும் எவனோ ஒருவன் தான் என்னை உண்மையாக உணர்கின்றான் எனக் கூறிய பகவான் அருச்சுணனிடம் இறைவனிடம் சரண்புகுமாறு வலியுறுத்துகின்றார்.

"உன்னுடைய இதயத்தை எனக்குத் தா!"

உலகில் வாழ்ந்து கொண்டிருக்கும் குழந்தைகளுக்கு அவதார புருஷனாகிய யோகேஸ்வரக் கிருஷ்ணன் அருச்சுணனுக்கு உபதேசித்த பகவத் கீதையின் மூலமாக இறுதியாக உபதேசித்த அழிவில்லாத புத்திமதியானது:-

கீதை - அத்தியாயம் 18 - சுலோகங்கள் 64, 65, 66

இங்கனம் இரகசியங்களில் மிக மிக சிறந்த இரகசியமான ஆழ்ந்த ஞான இரகசியம் எனது திடமான நண்பனாகிய உனக்கு என்னால் எடுத்து இயம்பப்பட்டது. இதை முற்றிலும் ஆராய்ந்தறிந்து பின் எப்படி விரும்புகின்றாயோ அப்படியே செல்.

என்னிடம் மனதை வைத்து, என்னிடம் பக்தி பூண்டு, என்னிடம் அன்பு செய்பவனாய், என்னை பூஜித்து, என்னையே வணங்குவாய். என்னையே நீ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடைவாய். இதை உனக்கு நான் ஆணையிட்டுச் சொல்கின்றேன். எனக்கு நீ பிரியமானவன்.

ஸர்வ தர்மான் பரித்யஜ்ய மாமேகம் சரணம் வ்ரஜ
அஹம் த்வா ஸர்வ பாப்பேப்யோ மோஷயிஷ்யாமி மா சுச:

எல்லாத் தருமங்களையும் பற்றவே விட்டொழித்து என் ஒருவனையே நல்லாய் சரண் புகுவாய். நான் உன்னை துன்பம் தருகின்ற எல்லாப் பாவங்களிலிருந்தும் விடுவிப்பேன். வருந்தாதே. கண்ணனின் இந்த உத்தரவாதத்தினால் மயக்கம் தீர்ந்த அர்ச்சுணன், "அச்சுதா, நின் அருளினாலே, எனது மயக்கம் ஒழிந்தது, எனக்கு நினைவு வந்துள்ளது ஐயங்கள் எல்லாம் ஒழிந்து உறுதியாயிருக்கின்றேன். உமது சொற்படி எதைச் செய்யச் சொல்கின்றாயோ அதனைச் செய்ய சித்தமாயுள்ளேன;" எனக் கூறி பூரண சரணாகதியடைந்தான். அவனைச் சேவிக்கத் தெரிந்து கொண்டால் அவனோடு இரண்டறக் கலக்கலாம்.

கீதையின் இரகசியமே சரணாகதி தான்

"அர்ச்சுணா! கீதை என் இருதயம் கீதையே
நான் விரும்பும் சாரம்"
ஸ்ரீ.கிருஷ்ணபரமாத்மா

வன்பற்றறுக்கு மருந்தென்று மாயவன் தானுரைத்த
இன்பக் கடலமுதாமென நின்ற இக்கீதைதனை
அன்பர்க் குரைப்பவர் கேட்பவராதரித்தோதுமவர்
துன்பக்கடலுள் துலங்குகைநீக்கித் துலங்குவரே
(கீதார்த்த ஸங்க்ரஹம்)

ஓம் நமோ பகவதே வாசுதேவாய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ ஹம்ச கமனாம்பிகா சமேத

# ஸ்ரீ ஆதிகோணநாயக சுவாமி

## திருவூஞ்சல்

இயலிசை வாரிதி
என் வீரமணி ஐயர்

காப்பு

செந்நெல்லும் கழனிதரு செல்வம் ஓங்கிச்
செழுங்கலைகள் கல்வியொடு செழித்தே வாழும்
நன்னகர்ஈ ழக்கோண மலையின் பாங்கே
நயஞ்சேரும் தம்பலகா மத்தில் மேவி
அன்னமெனும் மென்னடையாள் அழகியொடு
அமர்ந்துஆதி கோணநா யகனார்ஆட
இன்னமுதாம் தமிழூஞ்சல் இனிதே பாட
ஏரம்பக் கணபதிதாள் காப்ப தாமே !

நூல்

சீரோங்கு சுருதிநாற் கால்க ளாகச்
சிவாகமமே நல்வயிர விட்டம் ஆகத்
தாரோங்கு கலைஞானம் கயிற தாகத்
தண்ணருளாம் ஓங்காரம் பீட மாகப்
பாரோங்கும் பைந்தமிழில் ஊஞ்சல் வைகிப்
பார்வதியாம் அன்னநடை அழகி யோடு
ஊரோங்கு தம்பலகா மத்தின் ஆதி
கோணநா யகஸ்வாமி ஆடீர் ஊஞ்சல் !

புந்தியிலே பக்தியெனும் கால்நிறுத்திப்
புலனைந்தைச் சேர்த்தொன்றாய் விட்டமாக்கி
வந்திடுநாற் கரணங்கள் வடங்க ளாக்கி
வளமார்த்த திருவருளாம் பலகை தேக்கி
அந்தமிலாச் சீவனவன் இனிதே ஆட
அன்னநடை அழகியோடு அருளும் தேவா!
கொந்தவிழ்பூந் தம்பலகா மத்தின் ஆதிக்
கோணநா யகஸ்வாமி ஆடீர் ஊஞ்சல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதிமதி புனலரவு ஆட ஆடப்
பரந்துவிரித் திலங்குசடை ஆட ஆட
காதிலணி குழைதோடு ஆட ஆட
கரமணிமான் மழுவனலும் ஆட ஆட
ஓதிமத்தின் நடையழகி ஆட ஆட
ஓங்காரப் பிரணவமும் ஆட ஆட
ஓதிலரும் தம்பலகா மத்தின் ஆதிக்
கோணநா யகஸ்வாமி ஆடீர் ஊஞ்சல் !

நூலாட நுதலாட நீறும் ஆட
நுண்கலைகள் பண்கமழும் துடியும் ஆட
மாலாட மறையாட மதனும் ஆட
மலர்த்தொடை தலைமாலை ஆரம் ஆட
வேலாட விழியாட விசும்பும் ஆட
விண்ணோரும் மண்ணோரும் வியந்தே ஆட
சேலாடும் தம்பலகா மத்தின் ஆதிக்
கோணநா யகஸ்வாமி ஆடீர் ஊஞ்சல்!

வேதனோடு வாணியுமோர் வடந்தொட் டாட்ட
விஷ்ணுவொடு லக்குமியோர் வடந்தொட் டாட்ட
காதலுடன் சிவகணமோர் வடந்தொட் டாட்ட
களித்துருகும் அடியரொடு வடந்தொட் டாட்ட
ஓதிமத்தின் நடையழகி ஒய்யாரத் தோடு
ஊஞ்சலிலே அமர்ந்திருந்து ஓரக்கண் மாந்தி
கோதவிழும் தம்பலகா மத்தின் ஆதிக்
கோணநா யகஸ்வாமி ஆடீர் ஊஞ்சல் !

எழிற்கோட்டு மென்முலையாள் ஏகனோடு
என்றென்றும் குலவிமகிழ்ந் தருளிச் செய்த
குளக்கோட்டு மன்னனவன் கோயில் செய்தே
கும்பிடவே முத்தியதைக் கொடுத்த தேவா!
வழகோட்டுப் பண்பாட்டின் வம்ஸம் வாழ
வரைந்தேகல் வெட்டுக்கள் அருளும் சீலா!
குழைத்தோட்டுத் தம்பல காமத்தின் ஆதிக்
கோணநா யகஸ்சுவாமி ஆடீர் ஊஞ்சல் !


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேந்தனவன் இராவணனும் வேகம் கொண்டே
விறல்வீரத் தோள்களினால் மலையைத் தூக்கப்
பூந்தளிரின் பாதத்தின் விரலும் ஊன்றிப்
புவியரசன் அகந்தைதனைத் தொலைத்த வீரா!
கூந்தல் கமழ் ஓதிமமென் நடையாளோடு
குலவிமகிழ்ந் தருளதனைச் செய்யும் நாதா!
காந்தள்மலி தம்பலகா மத்தின் ஆதிக்
கோணநா யகஸ்வாமி ஆடீர் ஊஞ்சல் !

ஞாயிறுவெண் குடையேந்த ஆல வட்டம்
ஞாலமதில் சந்திரனாம் திங்கள் தூக்க
மாயிமக மாரிஅன்ன நடையாள் செவ்வாய்
மலர்ந்தன்பு தன்னாலே புளகம் எய்த
தேயவுடன் கண்டமதில் வியாளன் பூண்டு
திகழ்வெள்ளிப் பனிமலையில் ஆசனிக்கும்
கோயிலுறை தமபலகா மத்தின் ஆதிக்
கோணநா யகஸ்வாமி ஆடீர் ஊஞ்சல்!

கற்றைமுடி மண்சுமந்த களைப்பும் தீரக்
காவலனால் அடிபட்ட நோவும் ஆற
உற்றசக சுந்தரன்சொற் பித்தம் நீங்க
உதைத்தேகண் அப்பிய அவ்வலியும் மாற
குற்றவிட மள்ளியுண்ட கண்டம் தேற
கோதைக்குத் தூதான கால்கள் ஆற
கொற்றவனே தம்பலகா மத்தின் ஆதிக்
கோணநா யகஸ்வாமி ஆடீர் ஊஞ்சல்!

தத்துவத்தின் தத்துவனே ஆடீர் ஊஞ்சல்
தயாபரனே உமாபதியே ஆடீர் ஊஞ்சல்
அத்துவிதங் கடந்தவனே ஆடீர் ஊஞ்சல்
ஆனந்த மெய்ப்பொருளே ஆடீர் ஊஞ்சல்
சத்துசித்து ஆனவனே ஆடீர் ஊஞ்சல்
சச்சிதா னந்தமயா ஆடீர் ஊஞ்சல்
கொத்துமலர்த் தம்பலகா மத்தின் ஆதிக்
கோணநா யகஸ்வாமி ஆடீர் ஊஞ்சல் !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழி

அந்தணரும் வானவரும் ஆனும்: வாழி
அருமாரி அரசன்செங் கோலும் வாழி
செந்தமிழின் பண்பினொடு சீரும் வாழி
செப்பரிய கற்புநிலை சிறந்து வாழி
அந்தமிலாச் சைவநெறி வாழி வாழி
அன்னநடைச் சிற்றிடையாள் வாழி வாழி
கந்தமலர்த் தம்பலகா மத்தின் ஆதிக்
கோணநா யகஸ்வாமி வாழி! வாழி!



பிரதான கும்பங்கள் உலாவரும் அருட்காட்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றியுரை

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்நன்றி கொன்ற மகட்கு".

என்ற திருவள்ளுவர் அருளிச் செய்த திருக்குறளுக்கமைய இக் கும்பாபிஷேகப் பெருவிழா சிறப்பாக அமைவதற்கு பல துறையிலும் ஒத்துழைப்பு நல்கிய அனைவருக்கும் ஸ்ரீ ஹம்ச ஹமனாம்பிகா தேவி சமேத ஆதி கோணநாயகப் பெருமானின் அருள் கிட்டப் பிரார்த்திக்கின்றேன்.

கும்பாபிஷேக நிகழ்வுகட்காக ஆலய வீதியின் உள்ளும் புறமும் பாரிய அளவிலே துப்பரவு செய்து வீதிகள் அனைத்தையும் அழகு படுத்தி உதவிய அரச திணைக்கள உத்தியோகத்தர்களுக்கும் திருமலை, தம்பலகாமம் இந்து இளைஞர் மன்றத்தினருக்கும், சுந்தரலிங்கம் ஐயா அவர்கள் பொறுப்பிலான அன்பு இல்ல மாணவ மாணவிகட்கும் முதற்கண் எனதும் எமது சபையினதும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்தியாவில் இருந்து கும்பாபிஷேகத்திற்கென கொண்டு வரப்பட்ட பொருட்களை சுங்கப் பகுதியில் இருந்து கொண்டு வருவதற்கு சுங்க அதிகாரி அவர்களின் உதவிகளைப் பெற்றுத் தந்த திருமலை பாராளுமன்ற உறுப்பினர் திரு.இரா.சம்பந்தன் அவர்கட்கும் மயூராபதி காளி கோவில் தர்மகர்த்தா திரு.வல்லிபுரம் ஐயா அவர்கட்கும் எனதும் எனது சபையினதும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

எண்ணெக் காப்பு சாத்தும் வைபவத்திலே திரண்டு வந்த பெரும் மக்கள் கூட்டத்தை ஒழுங்கு நிரைப்படுத்தி அனைவருக்கும் எண்ணைக் காப்பு சாத்துவதற்கு சந்தர்ப்பம் கொடுத்த திருமலை இந்து இளைஞர் மன்றத்தினருக்கும் எனதும் எனது சபையினரதும் நன்றி உரித்தாகுக!

அடுத்ததாக எண்ணைக் காப்பு வைபவ தினத்திலும் மறுநாளான கும்பாபிஷேக தினத்திலும் மக்களுக்கு அன்னதான ஒழுங்குகளை மேற்கொண்டு சிறப்பித்த டாக்டர் திரு.விக்கினராசா ஐயா அவர்கட்கும் அவருடன் உதவி ஒத்தாசை புரிந்த பாடசாலை அதிபர் அவர்கள் ஆசிரியர் மற்றும் அனைவருக்கும் எனதும் எமது சபையினரதும் நன்றி கிட்டுவதாகுக!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்து ஆலயத்திற்கு மின் இணைப்பில் உதவிய மின் பொறியியலாளர்கட்கும் அவரது உதவியாட்களுக்கும், நீர் விநியோகத்திற்காக உதவிய நீர் விநியோக உத்தியோகத்தர், ஊழியர் அனைவருக்கும், கட்டிட வேலைகளுக்கான ஆலோசனை வழங்கிய பொறியியலாளர் திரு.து.தவசலிங்கம் அவர்கட்கும் எனதும் எனது சபையினரதும் நன்றி.

எல்லாவற்றிற்கும் மேலாக ஆலயத்தின் சொத்து, நிதி ஆகியவற்றின் பொறுப்பான பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் திரு.மாப்பா அவர்கட்கும் கும்பாபிஷேக வைபவங்களை அவ்வப்போது புகைப்படம் பிடித்து உதவிய புகைப்படப்பிடிப்பாளர் திரு.நா.கணபதிப்பிள்ளை அவர்கட்கும் ஆலய விமானங்கள், கோபுரம் ஆகியவற்றிற்கான கலசங்கள், கொடிமரங்கள் அனைத்தையும் திரு.சந்தனமுத்துச்சாமி ஆச்சாரியார் அவர்கட்கும் எனதும் எனது சபையினதும் மனம் நிறைந்த பாராட்டுக்கள்.

விசேடமாக எனது பணிகட்கு எல்லா விதத்திலும் சிரமங்களை பொருட்படுத்தாது உதவி நல்கிய தேவஸ்தானத்தின் முன்னை நாள் கணக்கப்பிள்ளை திரு.க.நாகராசா அவர்கட்கும் எனதும் எனது சபையினதும் நன்றி. இம்மலரை பதிப்பித்த மலராசிரியர் திரு.வே.வரதசுந்தரம், அச்சிட்டு உதவிய யுனிஆர்ட்ஸ் அச்சகத்தார் ஆகியோருக்கும் எமது நன்றி. பொது மக்கள், ஆலயக் கணக்கப்பிள்ளை, தொழும்பாளர்கள் அனைவருக்கும் நன்றி அறிதலை தெரிவித்துக் கொள்வதோடு நிறுத்தி ஆதி கோணநாயகரின் அருள் அனைவருக்கும் வேண்டி நிற்கின்றேன்.


சு.கா.சிவசுப்பிரமணியம்

(தலைவர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கும்பாபிஷேகக் கிரியைகள்



பரிபாலன சபையினர்

இடமிருந்து வலம் – மு. கணேசபிள்ளை, ஆ. தங்கராசா (தனாதிகாரி), சு. கா. சிவசுப்பிரமணியம் (தலைவர்), மு. கோ. செல்வராசா (செயலாளர்), சி. அருளம்பலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தம்பலகாமம் ஆதிகோணநாயகர் கோயில் வரலாறு பற்றிய முதலாவது வரலாற்று நூலை சபைத் தலைவர் திரு. கா. சிவசுப்பிரமணியம் அவர்கள் பிரதம குரு சர்வேஸ்வரக் குருக்களிடம் வழங்கி வெளியிட்டு வைக்கிறார்.



சபைத் தலைவர் திரு. கா. சிவசுப்பிரமணியம் அவர்களை கும்பாபிஷேக பிரதம குரு சர்வேஸ்வரக் குருக்கள் அபிஷேகம் செய்து ஆசீர்வதிக்கின்றார்.



பரிபாலன சபைத் தலைவர் கா. சிவசுப்பிரமணியம், முன்னாள் கணக்கப்பிள்ளை க. நாகராசா ஆகியோருடன் கோயில் சிற்பக் கலைஞர்கள்

முதல் வரிசை:- ஆர் சுதன், என் பார்த்தீபன், என். பிரபாகரன், பி. விஜயகுமார், கே. கிருபாகரன், ஏ. ஏகாம்பரம்,

இரண்டாம் வரிசையில் :- எஸ்இ சதீஸ், ஏ. மகேஸ்வரன், எஸ். கண்ணன், எஸ். இராஜ்குமார், எஸ். பாஸ்கரன், கே. லோகிதன்

மூன்றாம் வரிசையில்:-எஸ் சிவநாதன், எஸ். தசகுமார், எஸ். ரமேஷ்குமார், என். என். மகேஸ்வரன், தலைவர், சு. தா. சிவசுப்பிரமணியம், முன்னாள் கணக்கப்பிள்ளை க. நாகராசா, எஸ். ஆனந்தராசா, எஸ். பொன்னுத்துரை, எஸ். ஜெகதீஸ்வரன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தேவஸ்தான குருக்கள் பிரம்மஸ்ரீ பொன் குமாரசுவாமிக் குருக்கள். அவர்களைக் கும்பாபிஷேக பிரதம குரு பிரம்ம ஸ்ரீ சர்வேஸ்வரக் குருக்கள் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கிறார். அதனைத் தொடர்ந்து அவரை மாலையிட்டுக் கௌரவித்த சபைத் தலைவர் அருகே காணப்படுகிறார்.



## பொன்னாடை போர்த்தி கௌரவித்தல்

முக்கிய தொழும்பாளர் வைராவியாரை சபைத் தலைவர் திரு. கா. சிவசுப்பிரமணியம் அவர்கள் பொன்னாடை அணிந்து கௌரவிக்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தீட்சை பெற்ற வைபவம்
செல்வன் பா. ஹம்சபாலன், செல்வன் சி. ரஜனிகாந்தன், செல்வன் சி. லோஜினிகாந்தன் ஆகியோர் பிரதம குரு சர்வேஸ்வரக் குருக்கள் அவர்களிடம் தீட்சை பெறுகின்றனர்.



சபை உறுப்பினர்கள் குருக்களிடம் ஆசீர்வாதம் பெறுகின்றார்கள்.

LIBRARY ★ UNIVERS



இந்தியக் கலைஞர்கள் – உருத்திராபதி, பாஸ்கர், சங்கர்

University of Jaffna
166372
Library

166372




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

University of Jaffna
166372
Library


UNIVERSITY OF JAFFNA ★ LIBRARY ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Printed By: Unie Arts (Pvt) Ltd.